607

உ

குருவே துணை

இவை

திருநெல்வேலி முருகதாசசுவாமிகளென்றும்

திருப்புகழ்ச்சுவாமிகளென்றும்

விளங்குகின்ற

சந்தச்சரபம் ஸ்ரீலஸ்ரீ

தண்டபாணிசுவாமிகளின்

பாதசேகரரும்

# திருவிருதைத்க்கவட்டம்

## திருப்புகழ்.

விருதுபட்டி

க்ஷத்திரியவித்தியாசாலை ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதருமான

சந்தப்புலி. பாலூர்,

**மு. பார்த்தசாரதிநாயுடு அவர்களால்,**

இயற்றப்பெற்று

விருதுபட்டி மெசர்ஸ் ஏ அண்டு எப் ஹார்விக் கம்பெனி

புரோக்கர்

**மகா-ள-ள-ஸ்ரீ தா. ந. கந்தசுவாமிப்பிள்ளையவர்கள்**

பொருளுதவிகொண்டு. நூலாசிரியரால்

விருதுபட்டி சச்சிதானந்த அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றன:

1914.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
7 MAY 1914
MADRAS.

607
14

Q26:4V
N14
176365

உ

குருவே துணை

இவை

திருநெல்வேலி முருகதாசசுவாமிகளென்றும்

திருப்புகழ்ச்சுவாமிகளென்றும்

விளங்குகின்ற

சந்தச்சரபம் ஸ்ரீலஸ்ரீ

தண்டபாணிசுவாமிகளின்

பாதசேகரரும்

# திருவிருதைக்கலம்பகம், திருப்புகழ்.

OFFICE OF THE REGISTRAR ... REGISTERED ... MAY 1914 MADRAS

607

விருதுபட்டி

க்ஷத்திரியவித்தியாசாலை ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதருமான

சந்தப்புலி. பாலூர்,

மு. பார்த்தசாரதிநாயுடு அவர்களால்;

இயற்றப்பெற்று

விருதுபட்டி மெசர்ஸ் ஏ அண்டு எப் ஹார்விக் கம்பெனி

புரோக்கர்

மகா-௱-௱-ஸ்ரீ தூ. ந. கந்தசுவாமிப்பிள்ளையவர்கள்

பொருளுதவிகொண்டு, நூலாசிரியரால்

விருதுபட்டி சச்சிதானந்த அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றன.

1914.

# முகவுரை.

"வடவேங்கடந் தென்குமரி, யாயிடை" நிலவும் புத்தமிழ் தொத்த முத தமிழ்ப்பாஷை ஏனைய பாஷைகள் போலாது, ஆதிகாலந் தொட்டே தனித்த தாம், ஒப்பற்றதுமான பாஷையென்பது பக்ஷபாதமில்லாப் பாஷா விற்பனரனைவருக்கு மொருங்கே யமைந்த வுள்ளக்கிடை. பன்னீராயிர வருடங்கட்கு முன்னரேயே அகத்திய முனிவரின் பிரதமமாணாக்கர். திரணதூமாக்கினி யென்னுமியற்பெயர் பெற்ற ஆசிரியர் தொல்காப்பியனாரியற்றியருளிய தனித்தமிழிலக்கணமாகிய "தொல்காப்பியமே" இதற்குப் போதிய சான்றாகும். இத்துணைப் புகழையுடைய தமிழ்ப்பாஷையில், தத்துவங்களின் றொகைக்குச்சரியென்று சொல்லத்தக்கதாய்த் தொண்ணூற்றாறு பிரபந்தங்களுள்ளன. அவை,

1 ஜாதகக்கவி, 2 பிள்ளைக்கவி, 3 கலம்பகம், 4 பரணி, 5 கோவை, 6 ஐந்திணைச்செய்யுள், 7 வருக்கக்கோவை, 8 மும்மணிக்கோவை, 9 ஒருபா ஒருபஃது: 10 இருபா இருபஃது, 11 அஷ்டமங்கலம், 12 அங்கமாலை, 13 அநுராகமாலை, 14 இரட்டைமணிமாலை, 15 இணைமணிமாலை 16 நவமணிமாலை, 17 மும்மணிமாலை, 18 நான்மணிமாலை, 19 நாமமாலை 20 பலசந்தமாலை, 21 பன்மணிமாலை, 22 மணிமாலை, 23 புகழ்ச்சிமாலை, 24 பெருமகிழ்ச்சிமாலை, 25 வருக்கமாலை, 26 மெய்க்கீர்த்திமாலை, 27 காப்புமாலை, 28 வேனின்மாலை, 29 வசந்தமாலை, 30 தாரகைமாலை. 31 உற்பவமாலை, 32 தானைமாலை, 33 தண்டகமாலை, 34 வெட்சிமாலை, 35 வெற்றிக்கரந்தைமஞ்சரி, 36 போர்க்கெழுவஞ்சி, 37 வரலாற்றுவஞ்சி, 38 செருக்களவஞ்சி, 39 காஞ்சிமாலை,. 40 நொச்சிமாலை, 41 உழிஞைமாலை. 42 தும்பைமாலை, 43 வாகைமாலை, 44 வாதோரணமஞ்சரி, 45 எண்செய்யுள், 46 தொகைநிலைச்செய்யுள், 47 ஒலியலந்தாதி, 48 பதிற்றந்தாதி, 49 நூற்றந்தாதி, 50 உலா, 51 உலாமடல், 52 வளமடல், 53 ஆற்றுப்படை, 54 கண்படைநிலை, 55 துயிலெடைநிலை, 56 பெயரின்னிசை, 57 ஊரின்னிசை, 58 பெயர்நேரிசை, 59 ஊர்நேரிசை, 60 ஊர்வெண்பா, 61 விளக்குநிலை, 62 புறநிலை, 63 கடைநிலை, 64 கையறுநிலை, 65 தசாங்கப்பத்து 66 தசாங்கத்தயல், 67 அரசன்விருத்தம், 68 நயனப்பத்து, 69 பயோதரப்பத்து, 70 பாதாதிகேசம். 71 கேசாதிபாதம், 72 அலங்காரபஞ்சகம், 73 கைக்கிளை, 74 மங்கலவள்ளை, 75 தூது, 76 நாற்பது, 77 குழமகன் 78 தாண்டகம், 79 பதிகம்; 80 சதகம், 81 செவியறிவுறூஉ, 82 வாயுறைவாழ்த்து, 83 புறநிலைவாழ்த்து, 84 பவனிக்காதல், 85 ஊசல், 86 எழுகூற்றிருக்கை 87 கடிகைவெண்பா 88 சின்னப்பூ 89 விருத்தவிலக்கணம் 90 முதுகாஞ்சி 91 இயன்மொழி வாழ்த்து 92 குறத்திப்பாட்டு 93 உழத்திப்பாட்டு 94 பெருமங்கலம் 95 பெருங்காப்பியம் 96 சிறுகாப்பியம்.

என்பனவாம். இந்த 96 அங்கங்களையுடைய பிரபந்தத்தொகை யென்னும் பெண்ணிற்கு இருகண்ணென விளங்குவது கலம்பகமும், பிள்ளைக்கவியுமாம். பிள்ளைக்கவிக் குறுப்புப்பத்து, ஆனால் கலம்பகத்திற்கோ புயம், தவம் வண்டு, அம்மனை, பாண். மதங்கு,. கைக்கிளை, சித்து, ஊசல், களி, கார், ஊர்' மறம், காலம், தழை; இரங்கல், சம்பிரதம், தூது எனப்பதினெட்டாகும்.

"வைக்கும் புயந்தவம்வண் டம்மனை பாண்மதங்கு
கைக்கிளைசித் தூசல் களிமடக்கூர்—மிக்கமறம்
காலந் தழையிரங்கல் சம்பிரதம் கார்தூது
கோலுங் கலம்பகத்தின் கூறு"

என்று வச்சணந்திமாலையில் குணவீரபண்டிதரும் கூறியுள்ளார்; மேலும். பன்னிரு பாட்டியலாரும், இலக்கண விளக்கத்தாரும்; தொன்னூல்விளக்கத்

தாரும், முத்துவீரியத்தாரும், பதினெட்டென்றே கூறுவர். கலம்பகத்தைக் குறித்து ஆசிரியர் தொல்காப்பியரேதுஞ் சொல்லியிருக்கின்றாரோ வெனின், 'விருந்து' என்ற பகுதியிலடக்கிக்கூறியுள்ளார். அது, செய்யுளியல் 240வது சூத்திரமாகிய 'விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே' என்பதின் உரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'புதுவது கிளந்த யாப்பின் மேற்றென்றது என்னையெனின், புதிதாகத் தாம் வேண்டியவாற்றால் பலசெய்யுளுந் தொடர்ந்து வரச்செய்வது; அது முத்தொள்ளாயிரமும், பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்யுளுமெனவுணர்க; கலம்பகம் முதலாயினவுஞ் சொல்லுப' எனக்கூறியதால் விளங்கும்:

பிற்காலத்திலெழுந்த கலம்பகங்களுள் உறுப்புப்பதினெட்டேயல்லாமல் இடைச்சியார், வலைச்சியார், கொற்றியார், பிச்சியார், முதலிய பல புது உறுப்புக்கள்புகுந்துள்ளனவேயெனின்; அது குற்றமன்று. 'புதியன புகுதலும், வழுவல காலவகையினானே' என நன்னூலாரும்,

"மயங்கிசைக்கொச்சகக்கலிப்பாபுயவகுப்பம்மானை
 மறங்களிசித்தூசல்தழைவாழூர்மருட்பா
வயங்கெழிற்சம்பிரதமதங்கிரங்கல்கட்டுமடக்கு
 வண்குறம்பாண்கைக்கிளைபல்வாறுயதூது
தயங்குகழிக்கரைப்புலம்பல்காலமுதலாகத்
 தமிழ்ப்புலவர்கருத்தில்வாத்தக்கதுறையெல்லாம்
இயங்குகலம்பகத்தினுக்காமானாலுமொருவா
 றீரொன்பதெனச்சிலநூலியம்புதலுமுளவே.'"

என ஸ்ரீலஸ்ரீ தண்டபாணிசுவாமிகளும் கூறியதினால், அவைகளையும் அமைத்துக் கோடலேமுறையாமென்க.

கலம்பகம் என்பதற்குக் கலப்பு என்பது பொருள்; பலவகைப்பட்ட கவிகள் கலந்து சில இலக்கண வமைதிபெற்ற வொருநூலுக்கு அப்பெயரமைந்துள்ளதாலது ஆகுபெயர்; கலம்பகத்திற்கிலக்கணமென்னையெனின், நூலின் முதலில் ஒருபோகும் அதன்பின் வெண்பாவும் அதற்குப்பிறகு கட்டளைக்கலித்துறையும் அமைந்திருத்தலே முதலுறுப்பு; இது இன்றியமையாதது; பின்னர் மேற்கூறிய பதினெட்டுறுப்புக்களுங் குறையாமல் இயைய, மடக்கு, மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை, வெண்டுறை; யென்னுமிவற்றால் இடையிடையே வெண்பாவும் கட்டளைக்கலித்துறையும் விரவிவர நூல்முற்றும் அந்தாதியாகத்தொடுக்கப்படவேண்டும். அன்றியும் சந்தச்செய்யுட்களாக அமையுமானால் இக்காலத்து ரீதிக்கிணக்கமாயும் செவிக்கின்பமாயுமிருக்குமென்பது ஒருதலை. தெய்வத்திற்கியற்றப்பெறும் கலம்பகத்திற்குச்செய்யுட்டொகை 100 அந்தணர்க்கு 95 அரசர்க்கு 90 அமைச்சருக்கு 70 வணிகருக்கு 50 வேளாளருக்கு 30 ஆக இருக்கவேண்டும்; கலம்பக உறுப்புக்களின் இலக்கணமெல்லாம் ஈண்டுரைக்கப் புகின் விரியுமாதலின், அவைகளை வல்லார்வாய்க்கேட்டுணர்க.

விருதுபட்டி, ஸ்ரீ முருகப்பெருமான்மீது, யானியற்றிய கலம்பகமுந் திருப்புகழும் உருக்கொண்டு வெளியே நிலவச் செந்தமிழ்ப்புலமையாளரும் கந்தக்கடவுளையே சொந்தக்கடவுளாகக் கொண்டவரும், மெசர்ஸ் ஏ அண்டு எப் ஹார்விக்கம்பெனி புரோக்கருமான மகா-ள-ள-ஸ்ரீ தூ. ந. கந்தசுவாமிப்பிள்ளையவர்கள் புரிந்த பேருதவியை எழுமையும் மறக்காக்கடப்பாடுடையேன்.

"செய்யாமற்செய்த வுதவிக்கு வையகமும், வானகமுமாற்றலரிது"

விருதுபட்டி.
9—2—1914. } பா. மு. பார்த்தசாரதிநாயுடு.

# சாற்றுக் கவிகள்.

விருதபட்டி, மெசர்ஸ் ஏ அண்டு எப். ஹார்விக்கம்பெனி புரோக்கர்
**மகா-௱-௱-ஸ்ரீ தா. ந. கந்தசுவாமிப்பிள்ளையவர்கள்**
இயற்றியது.

சந்தகமுந்திருமுருகன்றாள்களையேதஞ்சமெனத்தப்பாதேற்றுஞ்
சந்தநயக்கவிப்பார்த்தசாரதிசீர்விருதைநகர்தன்னின்மேவுங்
கந்தனுக்குக்கலம்பகமுந்திருப்புகழுநயமாகக்கருதிச்சொன்னான்
இந்தவுலகிற்கவிஞரெல்லோரும்புகழ்வரதாலேற்றந்தானே.

இந்நூலாசிரியரின் சற்குருசுவாமிகளின் திருக்குமாரர்,
**ஸ்ரீமான் தி. மு. செந்தினாயகம்பிள்ளையவர்கள்**
இயற்றியவை.

விண்ணவர்போற்றியமகிமைத்திருவிருதைப்பதிக்குமரன்
  விரைப்பூந்தாளிற்
பண்ணவிர்செந்தமிழ்த்திறமைக்கலம்பகமுஞ்சந்தநயப்
  பதிகமொன்றுங்
கண்ணகனிலப்புலவோர்களிகூரப்பகர்ந்துநலங்
  கவினக்கொண்டான்
றண்ணமர்பைப்பொழிற்பாவூர்ப்பார்த்தசாரதிப்பெயர்கொள்
  சரதன்மாதோ.

இலங்குந் திருவிருதை யேய்ந்தகும ரேசன்
கலம்பகமுஞ் சந்தக் கவிபாத் — துலங்குந்
தனிப்பதிக முப்பார்த்த சாரதிசொற் றானுள்
ளினிப்பவடி யார்சிந்தை யில்.

திருத்துருத்தி இந்திரபீடங் கரபாத்திர சுவாமிகளாதின பரம்பரை ஸ்ரீலஸ்ரீ
இராமையதேசிக சுவாமிகளின் மாணாக்கரும், இந்நூலாசிரியரின் ஜேஷ்ட
சகோதரருமாகிய ஸ்ரீமான்:
**பா. மு. நாராயணசுவாமி நாயுடு அவர்களியற்றியது.**

ஒருதளவனருமனையுமருமகளுமுறையுமெம்முயர்மரபுமேலுமோங்க
வருதுணைவனெமதுபின்னோன்பார்த்தசாரதிவனைந்தசெந்தமிழ்மாலையாம்
விருதுநகரின்கலம்பகமொடுதிருப்புகழும்வேலனேயேற்பனென்றாற்
றருதுகளிலாவெமதுதந்தைதாய்முந்தையோர்தவமலாதேதேதரோ.

**மகா வித்வான். ஸ்ரீமான் தா. சங்கரதாஸ் அவர்கள்**
இயற்றியவை.

ஏகலைவன் பத்தியுற்றா னென்றாலுங் கற்றநிலை
யாகலைவன் கைப்பா டவதியுற்றான் — மாகலைவன்

# சாற்றுக் கவிகள்.

ணிக்குரிய சொல்வாணி நேர்பார்த்த சாரதிவேள்
மிக்குநிலை நின்றாணியார் மேல். (1)

வீடுந்தரும்புகழ்கூடும்படிசெயுமேவுபகை
சாடுந்தமிழ்த்திறச்சந்தக்கவிப்பார்த்தசாரதிவேள்
நாடும்பலவளங்காண்விருதைக்குகநாயகன்மேல்
பாடுங்கலம்பகஞ்சேருந்திருப்புகழ்ப்பாவினமே. (2)

இடந்தோறுமும்முரசுநின்றொலிக்கும்விருதையயிலேந்துவார்க்குக்
கடம்பாகுமென்னவொருகலம்பகமுமலைநிரைபோற்காணத்தோன்றுந்
தடந்தோளீராறுக்குந்தனித்தனியேதிருப்புகழுஞ்சாற்றினால்
படஞ்சேர்ந்தபார்நவிலும்பார்த்தசாரதியெனுமோர்பண்பினானே. (3)

என்னினுமிளைஞனென்னினுஞ்சந்தத்தினிமைகொள்கவியெழுதுவதில்
உன்னினும்வலியனுன்னினும்வலியனுரையினும்விரைவினுஞ்சேடன்
றன்னினும்வலியன்றரணியிற்பார்த்தசாரதியெனும்பெயரறிஞன்
பன்னியவிருதைக்கலம்பகம்புகழைப்பாரடிபாரதிமயிலே. (4)

அண்ணா மலைக்கிளியோ வல்லதுநெல் வேலிவரு
பண்ணார் மொழித்தண்ட பாணியோ—எண்ணான
சந்தப் படிக்காசோ சார்பார்த்த சாரதியோ
இந்தப் படிப்பாளி யார். (5)

கந்தநாதனடிகண்டுபாடுமொருகாரணக்கிளியினன்பனாம்
காலைமாலைநிசிவேளையாறுபொறிகருதியோதுகவுமாரனாம்
சந்தமோதுவதில்மிஞ்சுநாவலிகொள்தண்டபாணிமகிழ்சீடனாம்
சண்டையிட்டுவருகின்றபொய்க்கவிஞர்தங்களுக்குமொருகாலனாம்
செந்தினாபகனெனுங்கவிசனுரைதேர்ந்துதேர்ந்தெழுதுநிருபனாம்
தென்மொழித்திறனிலாங்கிலத்தொடுதெலுங்குசேர்கலையில்நிபுணனா
பந்தம்நீறுவிருதைப்பதிக்கிறைகலம்பகம்புகழ்களோதினான் (ம்
பாக்கியப்பெரியயோக்கியம்பெருகுபார்த்தசாரதியென்நேயனே. (6)

தாத்தனா தனதனந் தானதந் தனதனந்
தானன தானதன தானதன தானா.

கோட்டிலே மனமகிழ்ந் தாடிநின் றருள்குகன்
கூர்வடி வேலனுயர் மாமயிலின் மேலே
கோர்த்ததா ரணிபுயந் தோணவந் தடிதொழுங்
கோதிலர் கோருவது தானருளு வானே
கூட்டிலே பொருசுகஞ் சாவவன் றதனினங்

கோவென வோலமிடு வேழுதய வாலே
கூத்தர்போ லுருமறைந் தோடியன் பதுசெயுங்
கோலமன் நாவில்வளர் பாவையணி வானே
காட்டிலே கிளிகடிந் தோகைகொண் டிழிபுனங்
காவல்செய் மாதழகு காணவிழை வானே
காச்சுபா லமுதுதந் தேழையின் சுகநலங்
காணுநர் வாழ்விருதை யூர்முருகன் மீதே
பாட்டிலே பலவளஞ் சேர்கலம் பகமெனும்
பாடலு மார்புகழு மோதியவ னுமே
பார்த்தசா ரதியெனும் பேர்வழங் கியபெரும்
பாவலன் வேல்முருக தாசனறி வீரே. (7)

பென்ஷன் போலீஸ் இன்ஸ்பெக்டரும், திருச்செந்தூரில்
நியாயவாதியருமான சிந்துபூந்துறை, ஸ்ரீமான்,

**B. B. நாராயணசுவாமி நாயுடு அவர்களியற்றியவை.**

தனந் தனந்தன தனனதானதன தாத்த தான தனனு.

நிலங்களின்றலைமருதமாகியிசைநீட்சிமேவுவதுவாய்
நிறைந்தசெந்தமிழ்வலவர்கூடிமகிழ்நேர்த்தியானநிலையாய்
இலங்குறுந்திருவிருதைமாநகரிலேற்றமாகவுறைசீர்
இயைந்திடுங்குகமுருகவேளின்மிசையேட்டுக்ப்மெனவே
கலம்பகம்புகழ்றிஞர்பேணவணிகாட்டியார்வமுடனே
கனிந்துவிண்டனன்முருகதாசனிருகாற்சரோஜமுடிசேர்
பலம்பெறுந்தவனெழில்கொள்பாகைநகர்பாற்சரீரிவணமே
பகர்ந்திடும்புலியெனவொர்வாகைபுனைபார்த்தசாரதியரோ.

சொல்விற் பொருளிற் சுவையடக்கி மாவிருதை
வல்லிப் பதிக்கிருநூல் வந்துரைத்தான்—வில்லியல்பொன்
பாரதிப்பேர் நாமகள்வாழ் பாகைநக ரோன்பார்த்த
சாரதிப்பேர் நாவலவன் றான்.

குட்டுலொட்டியென்ற அழகியநல்லூர்ச் செந்தமிழ்க்கலாசபை
உபாக்கிராசனுதிபதி,

**ஸ்ரீயான், தி. அ. வேங்கடசுவாமி ரெட்டியாரவர்கள்**
இயற்றியது.

வயங்குவெண்மணிச்சூல்வளைக்குலங்குமுறுவார்கடற்புவிமிசைப்பாண்டி
வனப்புமிக்கொளிர்நாட்டிடையினெல்வேலிமாநகரருகுடைத்தாகி

# சாற்றுக் கவிகள்.

இயங்குவண்பொருனைப்புனிதயாறளிக்குமீர்ம்புனற்கழனிசூழ்பாலூர்
இயற்றமிழ்த்திருத்தாயுஞற்றுநற்றவத்தாலிசைப்பெரும்புலவரேத்தெடுப்ப
நயங்கிளரறிஞர்நாடகமகிழ்ந்துநயப்பவந்துதித்தநாவலவன்
நலங்கெழும்பார்த்தசாரதிப்பெயரோன்நாண்மலர்க்கடம்பணியலங்கற்
புயங்குலாம்விருதைப்பதியமர்முருகோன்பொன்னடிக்குயர்கலம்பகஞ்சீர்
பொலிதிருப்புகழென்றிருகவிமாலைபுனைந்தனன்புவனமுய்ந்திடவே.

விருதுபட்டி, சச்சிதானந்த அச்சியந்திரசாலைத் தலைவர்,

## ஸ்ரீமான், பொ. இராமலிங்கக்குருக்களவர்கள்

இயற்றியது.

திருகாதுகவிமாதுமலர்மாதுமகலாதுதிகழ்விருதைமாநகரில்வாழ்
தெய்வானைவள்ளிபங்காளனெழில்வாகுமிசைசீர்கலம்பகமொடுபுகழ்
பெருகார்வமாவனைந்தான்றண்டபாணியிருபிரசமலரடிமுடியிஞ்ஞன்
பெட்புமலிகவுரவர்குலாதிபன்சங்கநூற்பேராழியுண்டமேகம்
கருகாதுவெளிறுதுசந்தஞ்சொலும்படிக்காசுநிகரானவாக்கி
கந்தபுரநகர்கண்டகந்தசாமிக்குரிசில்காதலுறுமினியநண்பன்
ஒருகாலுமுருகனடிமறவாதுதுதிபுகலுமுத்தண்டதாலுதாரி
யோங்குபாலூரில்வருபார்த்தசாரதிநாமவுசிதவல்லாசன்மாதோ,

முதுகுளத்தூர் பிற்கா, கடலாடி வித்வான், விஸ்வக்ஞ,

பார்த்திபனூர் வகுப்பு ஸ்ரீமான்,

## ப. வே. பழநியாண்டி யாச்சாரியா ரவர்களியற்றியது.

பார்த்தசாரதிமருகன்றிருவிருதைப்பதிமுருகன்பணைதோட்காஞ்சு
பார்த்தசாரதிநயஞ்சேர்கலம்பகமுந்திருப்புகழும்பரிந்தேயாத்துப்
பார்த்தசாரதியிவன்போலில்லையென்றகாரணத்தாற்பாவின்பாவை
பார்த்தசாரதிநாமந்தகுந்தகுமென்றுசிநிதம்பகர்கின்றுளே.

இந்நூலாசிரியரின் மாதுலரும், விருதுபட்டி இன்டியன் டாக்டருமான ஸ்ரீமான்

## பா. தி. லக்ஷுமையா நாயுடு அவர்களியற்றியது.

சீரார் விருதைநகர்ச் செவ்வேள் கலம்பகமுந்
தாரார் திருப்புகழுஞ் சாற்றினன்—பேராருஞ்
சந்தப் புலிப்பார்த்த சாரதியா மெம்மருகன்
இந்தப் புவிக்கமுதா யே.

சாற்றுக்கவிகள் முற்றுப்பெற்றன.

குருவே துணை.

—oooooo—

# திருவிருதைக் கலம்பகம்.

## பாயிரம்.

கடவுள்வாழ்த்து.

### விநாயகர் துதி.

நேரிசைவெண்பா.

மருதைக் கலம்பகத்தை மாமருகன் செவ்வேள்
விருதைக் கலம்பகத்தை விள்ளப்—பொருதைவக்
கண்டகரிக் கையான் கவிகைமருப் பாத்தேயக்
கண்டக்ரிக் கையானோர் காப்பு. (1)

### அறுசமயக்கடவுளர் துதி.

கட்டளைக்கலித்துறை.

பொய்வேலை கொண்ட வசுரக் குழாமுற்றும் பொன்றவென்றே
வைவேலை விட்டோன் விருதைக் கலம்பகம் வாய்ப்பதற்கு
மைவேலை யெல்லரன் மாதரி விண்டு மதாசலத்தோன்
பைவேலை போக்கிடுஞ் சேந்தன்பொற் பாதம் பணிகுதுமே. (2)

### கலைமகள் துதி.

கலிவிருத்தம்.

வித்த கன்விரு தைப்பதி வேலற்காம்
புத்த கம்புகழ் கொண்டுபொ லிந்திட
மத்த கம்பொரு மாமுலைப் பாரதி
சித்த கந்தரு சேவடி சிந்திப்பாம். (3)

## நவவீரர் துதி.

அறுசீராசிரிய விருத்தம்.

நிகரிலா ஈார தன்செய் நின்மல வேள்வி தந்த
தகரினைக் கொணர்ந்து கந்தன் றகுபரி யாக்கு வித்த
பகரிசைக் கொற்ற வீர பாகுவோ டாகு மொன்பான்
சிகரிபோற் றிரடோள் வீரர் செம்பதஞ் சென்னி சேர்ப்பாம்.()

## வேல், மயில், சேவல் துதி.

சந்த விருத்தம்.

தனத்தனன தாந்ததன தானதன தானா.

கருப்புவிலை யேந்திவிழை காமர்முரு கோன்மா
விருப்புடைய தீந்தமிழின் மேயகவி மாலா
மருப்புணரி சூழ்ந்தபுவி வாய்நிலவு மாறே
திருப்புனித ஞாங்கர்மயில் சேவல்துணை யாமே. (5)

## கௌமாரத்திருத்தொண்டர் துதி.

எண்சீராசிரிய விருத்தம்.

பன்னுகின்ற வறுசமய விளக்கமெனு நூலிற்
பரமகுரு வரமதனுற் பார்மடந்தை யின்சீர்
துன்னுகரத் தூடுதித்த தூயமுனி வரனே
தொகுத்திட்ட செந்தினகர்த் தொன்மறையோர் முதலா
மன்னுமொரு நூற்றெட்டுத் திருத்தொண்டர் தங்கள்
மலரடியை யனுதினமு மனதாரப் போற்றி
மின்னுமயிற் கரத்தெந்தை வாழ்விருதை நகர்க்காம்
வியன்றமிழிற் கலம்பகப்பா நூறுமிளிர்ந் திடவே. (6)

## குருவணக்கம்.

கட்டளைக் கலிப்பா.

குல்லைமாலிகைவேள்மகிழ்சாருவாக்
குலவியன்பர்குழாஞ்சிறந் தோங்கிட
நெல்லைமாநகர் வந்துதித் தோனருள்
நிறைந்தவாரிநீள்சந்தச்சரபம்வன்

கல்லைமானுமுளத்தமியேனுமே
கலைவன்போலுணர்வெய்தச்செய்கற்பகம்
முல்லைமானிகர்தண்டபாணிப்பெயர்
முருகதாசன்றுளென்முடிப்பூவரோ. (7)

## அவையடக்கம்.

கட்டளைக் கலித்துறை.

கறைமதி பாறு தனைநிக ராதென்பர் காசினியோர்
மறைமதி யீச னவையிரண் டம்பகமாப்புனைந்தான்
குறைமதி யேனுவல் நூலுமுன் னூலொடு கூட்டிடுவார்
நிறைமதி யோர்பிறர் வீனுக்கு வாது நிகழ்த்துவரே. (8)

## நூலியற்றிய காலமுதலியவை.

ராஜாங்க ஜோதிஷர், யாழ்ப்பாணம், பிரம்மஸ்ரீ ஹே. கார்த்திகேய ஐயரவர்கள் பாதசேகரரும், ஜோதிஷ வான சாஸ்திரியுமான விருதுபட்டி, ஸ்ரீமான், க. சந்தனஞ்சேர்வையவர்களியற்றியவை.

## எண்சீராசிரிய விருத்தம்.

அந்தமிகு சாலியவா கனசகாப்த
மாயிரத்தெண் ணூற்றுமுப்பத் தைந்தின் மேவி
வந்தபிர மாதீச மகர மாசம்
மகிழிருபத் தேழ்திகதி மதிநாள் பூசங்
கந்தவிரு தைக்குகற்குக் கலம்ப கஞ்சொற்
கமழ்சந்தத் திருப்புகழுங் கருதிச் சொற்றுன்
பந்தனைய முலையார்க்கோர் மதனும் பாவூர்ப்
பதிப்பார்த்த சாரதிப்பேர்ப் பாவலோனே. (9)

## எழுசீராசிரிய விருத்தம்.

கண்ணிய பலிஜ கவுரவர் குலத்தான்
கவின்முத்துக் கிருட்டினத் தோன்றல்
பண்ணிய தவமே திரண்டுரு வான
பாக்கியன் பார்த்தசா ரதிவேள்
நண்ணிய விருதைக் குகற்குச்செந் தமிழால்
நயக்கலம் பகந் திருப் புகழும்
எண்ணிய லறிஞ ரனைவரு மெச்சி
யின்புறற் கிசைந்திசைத் தானே. (10)

# நூல்

## மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.

### தரவுகள் 8.

சீர்பூத்த வெள்ளிமலைச் செம்பவள மேனியரன்
பார்பூத்த மலைமகளின் பாகம்விடுத் தேகிமணச்
செங்கமலப் புத்தேள்முன் றிரட்டுமறை முழுதுணர்ந்தும்
அங்கமல யோகுமுறை யறியாதே யடிபணிந்த
சனகருக்கா வுளங்கனிந்து தழைகல்லா லடியிலொரு
தினகரனைப் போன்றிருந்து திருச்சின்முத் திரைகாட்டி
மணக்கோலஞ் சான்பொடியா மடிந்துவிழ நோக்கியப்பால்
இணக்கோல வமரருக்கா விரங்கிநுதல் விழிதிறக்க
எழுந்தபொறி யோராறு மெழிற்பாகீ ரதிதோயச்
செழுந்தகைம காராகித் தேன்பிலிற்றுந் தாமரைப்பூந்
தொட்டிலிடை யேகிடந்து துன்னறுமீன் முலையுண்டு
மட்டிவிருங் கருணையொடு வாரியெடுத் துமையணைக்க
அளப்பரிய வறுமுகமு மாகமொன்று மாத்திகழ
உளப்பரிவோ டுச்சிமுகந் தோயாமல் முத்தமிடச்
சேந்ததிரு மேனியதாற் சேந்தனெனக் கவிப்புலவோர்
பாந்தமொடு முரைபகரும் பரிசுடைய முருகோனே.

### அராகங்கள் 4.

விதியுள மலமர விறலொடு கறுவினை
நதியுள சடிலனெர் நலமுற நிறுவினை
மகபதி யிகல்கெட மணிமுடி யருளினை
ககபதி முதலினர் களிதரு தெருளினை,

### பெயர்த்துந் தரவுகள் 6.

மலயமலை முனிக்கரசு வழிபடவே பிரணவத்தின்
நிலயமதை யுதவியவன் நீடூழி வாழவைத்தாய்
வீணையுளர் நாரதன்செய் வேள்விதரு மேடமதை
ஆணையுணர் செம்பரியா யாக்கியதன் மீதிவர்ந்தாய்

முரண்டுடைய கீரனொரு முழையினிடை யகவலினாற்
சரண்டுதிக்கக் கேட்டலகை தனைமாய்த்து விடுவித்தாய்
திட்டைமேற்கொண்டொழுகுந் திறற்பொய்யா மொழிவாயால்
முட்டையெனப் பெயரிட்டு முழக்கியவெண் கவியேற்றாய்
எஞ்சுகம்வந் தடுத்தாலு மிறுதியிலை யென்றுதமிழ்க்
கிஞ்சுகத்தை நின்வலத்தோள் கிளரணியா கப்புனைந்தாய்
வேணுவனத் தொருபுதிய வியஃறெண்டன் றனைநீமுன்
பூணுவனக் கிள்ளையென்று புகன்றுகவி கோடிகொண்டாய்

## நாற்சீரோரடியம்போதரங்கம் 4.

புவிமுழு துளமலை யாவு முற்றனை
புகல்முத லிடைகடை வீறு மற்றனை
குவிமுலை மறமக ளாசை பெற்றனை
குழமத கரிவரு மாறு சொற்றனை

## முச்சீரோரடியம்போதரங்கம் 4.

கனிமர மாகியு நின்றனை
கவிழிணர் மாவினை வென்றனை
அணிமயில் வாகன முந்தினை
அடன்மிகு சேவல்பொ ருந்தினை.

## இருசீரோரடியம்போதரங்கம் 4.

வேலை நேர்ந்தனை
மாலை யீர்ந்தனை
உள்ள நள்ளினை
கள்ள மெள்ளினை.

## தனிச்சொல்.

ஆதலால்,

## ஆசிரியச் சுரிதகம்.

அன்னை தந்தையு மறிகுரு தெய்வமு
நின்னை யன்றி நீணிலத் தெவரே ?
புல்லிய ரிணக்கம் புரியா திரவும்
எல்லியம் போது மெந்தைநின் றாளே

கருதுபு நின்றேன் காட்சி நல்கி
வருதுயர் நீக்கி வளம்பல தேக்கிப்
பத்தியிற் சிறந்து பவநெறி துறந்து
முத்தியிற் புகுத முன்னிவந் தடுத்தேன்
திரங்கி யாக்கை தீயுறு முன்னம்
இரங்கி யென்னை யாட்கொள் ளுதியால்
விண்ணவர் நகரை வெறுநக ராக்கும்
வண்ணம் பெருகி வளர்புகழ் விருதைப்
பதிதனில் மேவிப் பங்கயன்
விதிதனை யழிக்கும் விசயவே லவனே. (1)

## நேரிசை வெண்பா.

வேலா வலையமட மின்னார் தனமிவற்றின்
பாலா வலையடையப் பண்ணாதே—சேலார்
விளைகழனி சூழும் விருதைக் குகாநின்
றளைகழனி தம்பரவத் தா. (2)

## மாலையிரத்தல்.

### கட்டளைக்கலித்துறை.

தாதிருக்குங்கடப்பங்கசன்றாவிடத்தன்கண்பொருந்
தாதிருக்குங்கடப்பங்கறியாவிருதைக்குகநித்
தாதிருக்குங்கடப்பங்கனையீர்சந்துசாற்றுமென்றாள்
தாதிருக்குங்கடப்பங்கண்ணிதாபெண்டயங்கினளே. (3)

## கலிநிலைத்துறை.

தயங்குகுரும்பையைநகுமுலைமங்கையர்தாட்போதே
வயங்குபெருங்கதியெனவலம்வந்துழல்மாற்பேயீர்
செயங்குரவம்புனைபுயமுருகன்கதிசேர்ப்பானல்
இயங்குமுறுந்திருவிருதையிலன்பொடுமேத்தீரே. (4)

## அறுசீராசிரிய விருத்தம்.

ஏத்தியுனதுபன்னிருதோட்கிணைராற்றமிழாலியன்மாலை
சாத்தியுருகுந்தமியேற்குந்தளராதிடுக்கண்டரலாமோ
ஆத்தியுகந்தமுடிப்பரமற்கருள்செம்பொருளெற்கருளியினே
காத்தியுகங்கள்கதித்தாலுங்கதியாவிருதைப்பதியானே. (5)

## எழுசீர்ச்சந்த விருத்தம்.

பதிகமனதொடுமெனிதர்மிசைகவிபகருமிழிவுறுபுல்லரே
நதிகளெவையுயர்கடவுள்பகிரதிநலனையுதவிடுமுய்யவே
அதிகமிலதொருகடிகைவிருதையினயில்கொள்முருகனையுள்ளினல்
நிதிகள்பலவொடுசகலவிழைவுமொர்நிமிடமதிலருள்செய்வனே. ()

### தவம்.

## எண்சீராசிரிய விருத்தம்.

செய்தவ மிகுக்கவனந் திரிந்தும் பாவஞ்
செய்தவ மிகுக்கவனந் திரிந்தீர் மேலு
மெய்தழைப்புக் கற்பமதியாலே கூற்றின்
விருந்தழைப்புக் கற்பமதி விரைவா யுண்டீர்
உய்தலினி யேதுமக்கொ ருபாயங் கேண்மின்
உண்மைபா மிகவெளிதே யுறுதி யாக
வைதயங்கு வேற்கரத்தான் விருதை மேவும்
வரதசர வணபவனை வணங்கல் தானே. (7)

## இரங்கல்.

### தாழிசை.

வணக்குஞ்சிலை யொடுமன்மத வண்டப்பயல் கங்குல்
மதமாவினி லேறிக்கணை வாரிப்பொழி கின்றான்
கணக்குக்கமை யாதேதொகை கமழ்சந்தனச் சேறு
கனலாயெரி கிறதேயினிக் காணப்பெறு வேனோ
குணக்குக்கட லெல்லோன்பணிக் கோள்வாய்விழுந் தனனோ
கோழிக்குரல் வளைந்தது கொல்லோவெனச்சோர்ந்தாள்
மணக்கும்பொழில் விருதைப்பதி வாலைக்கும ரேசா
வந்தாலல தந்தோவொரு வனிதைப்பழி வருமே. (8)

## கட்டளைக்கலிப்பா.

வருமதப்பிணக்காளரெவ்வாறெலாம்
வாய்பிதற்றினுமென்மனநின்னெழில்
மருமலர்ப்பதமன்றிவேறெஃதையும்
வாஞ்சிக்காதெனுமாண்பறிந்துள்ளநீ

கருமமொன்றடியேன்விழைந்தும்மது
காதிற்கேட்டிருந்தேனினுந்தந்திலாய்
குருமகன்சிவனுக்கென்னநேர்ந்தவா
கோதிலாவிருதைக்குணக்குன்றமே. (9)

## கொச்சகக் கலிப்பா.

குன்றுறையுங் குறவள்ளி கோகனகத் தாளிணையைச்
சென்றுபணிந் திடுமுருகோன் றிருவிருதைப் பதியடியார்
என்றுமுத்திச் சிந்தனையா ரிரக்கத்திற் சிந்தனையார்
கன்றுசண்டற் குளஞ்சலிக்கார் கடைக்கோவிற் குளஞ்சலிக்கார்.()

## இரட்டையாசிரிய விருத்தம்.

சலியாம லிரவுபகல் பொறியாறு நுவலுமொரு
தகைவீறு சிதறிடாதே
தவவேட மொடுநிலவு கவுமாரர் திருவடிகள்
தலைமீது கொளலறாதே
கலியாகு மடமகளிர் புவியாசை யிவையிலுயிர்
கழியாது கலபமீதே
கருகூல மெனவெனிரு வினையோடு மருளவரு
கவினேறு தினமுறாதோ
புலியானை யதளுடைய சிவனோடு மரியதொரு
பொருளோது பரமகுருவே
புவிநாக முடிகடொறு மகலாது நடனமிடு
புகழாறு முகவமலனே
நலியாம லமரர்முடி சிதறாமல் நிறுவுதிறல்
நவவீரர் துணைவலோனே
நபமோடு தொடுபொழில்கள் புடைசூழும் விருதைநகர்
நடுவான குகநாதனே. (11)

## புயவகுப்பு.

தனனத்ன தானதன தனனதன தானதன
தனனத்தனத்தந்த—தானத்தனந்தன.

தனையனிகர் மாமலய முனியியலி னுடுயிர்கள்
தருபொற்பினுக்கெண்கள்---நேரச்சிறந்தன

தடகடவி நாயகனெ டிகலியிரு காதிலுகிர்
தளரச்சுறுக்கென்று—கோதிக்குலுங்கின

தழைகலப நீலமயில் கரிதகரி லேறியருள்
தருதற்குகைத்தன்பர்—காணப்பிறங்கின

சமரகுலி சாயுதம்வில் கணைதுடிவெல் வேல்முதல
தழுவிப்பணைத்தந்த—மாகத்துலங்கின

தினையளவு நேயமறு பரவன்வனை பாவினிருள்
சிறைவிட்டுயக்கன்று—பேயைத்தடிந்தன

திசைமுகனை யோர்பொழுது குடிலைவின வாவணிகொள்
சிரசிற்சடக்கென்று—மோதித்திகழ்ந்தன

திரிபுவன மேவுமவர் மருளவிடு தாருகனெர்
தினமற்றிடக்கொன்று—சீரைப்புனைந்தன

திரையெறியும் வாரிதியி னெழுபுதிய மாவினுயிர்
தெறிபட்டறத்துண்ட—மாகப்பிளந்தன

பனையனைப நீளுருவ மதுகொடுபொ யாமொழிமெய்
பதறித்தொழத்தண்டு—கோலிப்புகுந்தன

பழையமது ராபுரியில் வருகவிவ லோர்தமது
படிறற்றுயத்தந்த—வீறுற்றிலங்கின

பரணிலொரு கோகிலம தெனவருமி னுள்செவிதழ்
பருகத்துதித்தண்டு—போதிற்குவிந்தன

பருவமட மாதர்விழி குரவுகமழ் நீபமலை
படுகப்புரச்சந்து—மாரத்துதைந்தன

வினையகலு மாதவரை நகுமடைய ராவியற
விடுதற்கடுத்தெங்கு—நாடிக்கிளர்ந்தன

விமலமுரு காவெனமு னமுதகொடி நோவகல
விரைவிற்கரப்பங்க—மாறற்கிரங்கின

வியனருணை நாதனருள் மிகுமுருக தாசன்வனை
விவிதக்கவித்தொங்கல்—சூடிப்பொலிந்தன

விசயமென வோலிடுபுள் வரைகொடிநி லாவுதிரு
விருதைப்பதிக்கந்தன்—வீரப்புயங்களே. (12)

## நேரிசை வெண்பா.

புயங்கமலை யார்க்குநதி பூண்டவர்க்கும் வாமம்
வயங்கமலை யார்க்குமொரு மைந்தா—தயங்கமலை
வித்தமியற் றுன்னு திருக்கவிரு தைக்கடம்பா
வத்தமியற் றுன்னு தருள். (13)

## கட்டளைக் கலித்துறை.

அருவானவனுமுருவானவனுமடியர்மென்மேற்
கருவானவசெனனத்துழலாதுகடத்தியிடக்
குருவானவனெனவந்தடுப்போனுங்குளக்கணிடைத்
தருவானவனுய்பணிவிருதைப்பதிச்சண்முகனே. (14)

## வண்டுவிடு தூது.

### எழுசீர்ச்சந்த விருத்தம்.

முகமனுரைத்திகழ் நறவுகுடித்திட
முளரியைநத்திடு வண்டீரே
சுகமருளிப்பொழி லிடையெனைவிட்டகல்
துணைவரிணைக்கம றந்தாரால்
இகமதிலொப்பரு விருதைநகர்க்குக
னிடமெனிடிக்கண றைந்தாலே
தகமதிபெற்றவ ருமதுபெயர்க்களி
தரல்தகுமொப்பியெ ழுய்பீரே. (15)

## அம்மானை.

### மடக்குக்கலித்தாழிசை.

எண்ணிலங்கு மேனி யெழில்விருதை வேலவனார்
பெண்ணிரண்டு பக்கல்கொண்ட பித்தர்மக னம்மானை
பெண்ணிரண்டு பக்கல்கொண்ட பித்தர்மக னாமாயின்
தண்ணியன்ற நெஞ்சொடெவர் தந்தனர்பெண் ணம்மானை
தப்பிலிக்குப் பெண்ணிடையன் தந்தனன்கா ணம்மானை. (16)

## இரங்கல்.

### மடக்கு. அறுசீராசிரிய விருத்தம்.

மாலயன் போற்றுந் திருத்தாளார்
மாசற வுள்ளந் திருத்தாளார்

சீல விருதைக் கணியாரே
சிந்தையி லென்னைக் கணியாரே
கோல மிகுந்துயர் போதாவே
கூறிட வாய்ச்சொலும் போதாவே
சேலருந் துங்குறும் புள்ளீரே
சென்றுரைக்கச் சற்றன் புள்ளீரே. (17)

## நற்றாயிரங்கல்.

மடக்கு. எழுசீராசிரிய விருத்தம்.

புள்வரை கொடியார் போதற்குங் கொடியார்
புடையுடை யாரிரு கொடியார்
உள்வரை மதிப்பா ருறுகணை மதிப்பார்
உன்னலர்க் கென்றுந்தா மதிப்பார்
வில்வரைக் குடையார் விருதையிற் குடையார்
வேனிலான் கவின்றனக் குடையார்
கள்வரை தண்டார் தந்தினி தண்டார்
கலங்கியென் மகள்புலர்ந் தனளே. (18)

## ஊர்.

சிலேடை - நேரிசை வெண்பா.

புல்லம் புயமடவார் போர்விழியு மென்மொழியும்
வெல்லம் பழிக்கும் விருதையே—கல்லம்பு
சுட்டுவந்த வேற்படையார் தொண்டர்குழு சூழ்ந்திருதாள்
மட்டுவந்த வேற்படையார் வாழ்வு. (19)

எண்சீராசிரிய விருத்தம்.

வாசவ னொருகோனுங் கேசவன் மருகோனும்
வளரணி மயிலோனுங் கிளரணி யொயிலோனும்
நீசரை மருவானுந் தாசரை யொருவானும்
நிகரறு கலையானும் பகரறு தலையானும்
மாசடு கிளியானுந் தேசடு வொளியானும்
மாதரி மகவானும் வாதரி தகவானும்
பூசனை மறியானு மாசனை நெறியானும்
பொருவிரு தையிலானுந் திருவிரு தையிலானே. (20)

## கைக்கிளை.

### கட்டளைக்கலித்துறை.

இலங்குங்கலைமகளோ திருவோ நல்லிரதிகொலோ
துலங்கும்புனல்மகளோ கடுங்கூற்றுவன்றாதுகொலோ.
கலங்கும்படியடியாரைவிடா முருகன்விருதைப்
பொலங்குன்றிடையெனதுள்ளமுற்றுங்கவர்பொற்கொடியே ()

## கலித்துறை.

கொடியாடுநெடுமாடமலிசீர்கொள்விருதைக்குகாநின்றனக்
கடியானெனத்தொண்டுசெய்வேனுளப்பங்கயத்தின்கணே
குடியாகநீயுற்றுநினைமிஞ்சியிடரம்மகோலோச்சலைத்
தடியாதிருக்கின்றவிதமேதுசரியோதனித்தெய்வமே. (22)

## த ழை.

### எண்சீராசிரிய விருத்தம்.

தெய்வமனைத் தினுக்குந்தாங் குருவே யென்னத்
திகழ்விருதைக் குகனருள்போற் சிறந்தாய்! நின்கை
கொய்வண்ணத் தழையைவஞ்சிக் கொடியா ளேற்றுக்
கொண்டவுடன் விழியிலொற்றிக் குழைய மோந்து
மெய்வனப்புக் கொங்கையின்மீ தணைத்துக் கூந்தல்
மேற்செறுகி யரைத்துடல மிளிரப் பூசிப்
பைவருமா மழைவீழப் பயிர்மே லோங்கும்
பரிசுநிகர்த் தானந்தப் படுகின்றாளே. (23)

## சி த் து.

### தாழிசை.

ஆளனெங்கள் விருதைவேல னடிபராவு சித்தர்தம்
அடிமறாத சித்தரே மநேகவேதை யறிகுவோம்
காளகண்ட னுக்கிருப்பு வெள்ளிபொன்னு மாற்றினோங்
கரியமால் நிறம்பொன்மேவக் காட்டினோம் வனத்துளே
கோளமைந்த தோலையேமா தங்கமாப் புரிந்தனம்
குலவுமம்பு லிக்கணத்திற் கூறுவேங்கை நாட்டினோம்
வாளமைந்த விரணியாக்கன் கண்ணுந்தங்க மாக்கினோம்
வகுத்துரைப்பி னெங்கள்வித்தை வளருமொன்றுகேண்மினே.

## இதுவுமது.

இரட்டையாசிரிய விருத்தம்.

கேளிரத வாதத்தி னுக்குரிய குருவொன்று
கேடிலா மகரிஷிகடாங்
கிட்டுபரி சனவேதி யென்றுரைப் பாரது
கிளத்தின்மணி தர்க்குருது
நாளிரவி மதிதனக் குரியநாட் கூடதா
நாகமொரு குகையில்விட்டு
நல்லகுரு தினமிரவு சலியாம லூதினல்
நண்ணுமறு நாள்வெள்ளியாம்
தோளிலைக் காதன்றெ டேழுநா ளூதிடிற்
சொன்னமறு நாள்பொன்னதாம்
சூதொன்று மில்லையிது மெய்ம்மையே யெங்கள்பசி
தொலையவிப் போதமுதுதா
வேளினைப் பொடியவிடு பரமனருள் முருகனுறை
விருதைநக ரன்றியிந்த
மேதினியி லெங்கணும் புகழ்பெற்ற சித்தரேம்
வீணென் றிகழ்ந்திடாதே. (25)

## சந்தவிருத்தம்.

தனனதத்த தனனதத்த தனனதத்த தனதன.

இகலறுக்க வனையயத்த மிசையவைத்த விறைவனே
சகலசித்தும் விருதையிற்கை தரமுளைத்த தலைவனே
அகலவிட்டு விடலெனக்கு னருள்பழுத்த வடிகளே
புகலதட்டி நமன்வெருட்டு புரிவிசித்த பொழுதிலே. (26)

## இரங்கல்.

எழுசீராசிரிய விருத்தம்.

பொழிவிழி நீரே வாரிதி யாகப்
பொருந்திடு பாயலே வடமாக்
கழிவிர கத்தீ வடவையா மாலாக்
கண்படை பெறுவதூ மின்றிப்
பழிவிரல் வைத்து நாழிகை யெண்ணிப்
பாவையாள் வருந்துத லழகோ

மொழியிடை விருதை முன்னிவாழ் முருகா
முத்தனே நித்யகா ரணனே. (27)

## இதுவுமது.

தாழிசை.

காரணங்கைமுன்வேட்டவேலனைக்
காரணங்கொலென்னோர்மகள்
காதல்கண்டுடன்வந்தடுத்தலர்க்
காதல்கண்டிலன்வஞ்சரை
மாரணந்தருமாற்றினன்மதன்
மாரணக்கணைமாற்றிலான்
மண்டுவண்டுறைதாருகந்தவன்
மண்டுவண்டுறல்போக்கிலான்
பேரணங்குறைசெய்முன்வந்தவன்
பேரணங்கினுநீக்கிலான்
பேசருங்கலைதந்தபெற்றியன்
பெண்ணருங்கலைதந்திலான்
வாரணங்கொடியாகவைத்தவன்
வாரணங்கொடிமட்டிலே
வன்கணனெழில்விருதைமேவிய
வரதசண்முகவள்ளலே. (28)

## நேரிசை வெண்பா.

வள்ளத் தனம்புடைத்த மங்கைநல்லார் தங்கொடிய
கள்ளத் தனம்புரியுங் கண்ணாலே—யுள்ளத்
திடமுருகா தேவாமுஞ் சீர்தா விருதை
நடமுருகா தேவாவிந் நாள். (29)

## கிள்ளைவிடுதூது.

கட்டளைக்கலிப்பா.

நாளும்வந்தனைகொள்விருந்தைப்பதி
நண்ணும்வேலருக்கெச்சக்களத்திமார்
கோளும்வம்பும்புகன்றனரோவதாற்
கோபங்கொண்டனரோவெனைநத்திலார்

வேளும்வந்தடுக்கும்முன்னரங்குநீ
விரைந்துசென்றுளம்மெச்சிடச்சொற்றவர்
மீளும்வண்ணம்புரிந்தடுத்தாலெற்கிம்
மேதினிக்குளுயிர்க்கிளையாவையே. (30)

## ஊசல்.

எண்சீராசிரிய விருத்தம்.

ஏய்ந்தவறமிரண்டுமேணித்தூண்களாக
இணையில்லாப்பக்திநடுவிட்டமாக
வாய்ந்ததிருஞானமெனும்வடத்தைப்பூட்டி
வருமுத்திப்பலகையின்மேல்மணையார்க்கூடு
தோய்ந்தவிர்வைவேலேந்தியிருந்துமைதீர்
சுகம்பெற்றசுகம்பாடவாடீரூசல்
ஆய்ந்தபசுந்தமிழ்மணக்கும்விருதைமூதூர்
அமர்ந்தருளுஞ்சிவகுருவேயாடீரூசல். (31)

## கார்கண்டுபாகனோடுகழறல்.

கட்டளைக்கலித்துறை.

ஊசற்குழைவள்ளிகாந்தன்விருதையுறைபுகழைப்
பேசற்குருகாருளம்போற்கருகிப்பிளிறிடுங்கார்
மாசற்குழலவள்கண்டுவிழிப்புனல்வார்க்குமுனம்
ஏசற்குணவலவாகடவாய்நம்மிரதத்தையே. (32)

## வெறிவிலக்கு.

நேரிசைவெண்பா.

தத்தைக்குஞ் சிக்குநிகர் தையலாள் தன்றுயர
சத்தைக்குஞ் சித்தழிக்கத் தாழாதே—சித்தைத்
தருவித்த கன்விருதைச் சண்முகன்ரு ரொன்றே
துருவித்த கன்புதரா தோ. (33)

## மடக்கு.

பன்னிருசீராசிரிய விருத்தம்.

தோயம்படைத்தநாவாயே
தூற்றும்படைத்தநாவாயே

சூழநாகத்தண்டலையே
துகடீர்நாகத்தண்டலையே
பாயஞ்சிறையனப்புள்ளே
படும்வேளிறையனப்புள்ளே
பவளம்படரவருந்திடரே
படைத்தேன்படரவருந்திடரே
ஆயஞ்சுறவேதிருக்கையே
அனையச்சுறவேதிருக்கையே
அடுக்குங்கண்டற்போதினமே
அழிவேன்கண்டற்போதினமே
மேயம்பருகுபானலமே
விடமேபருகுபானலமே
விழைந்துமுருகற்குளமயமே
விருதைமுருகற்குளமயமே. (34)

## களி.

### தாழிசை.

மயக்கம்படையாத்தொண்டர்கள்வாழ்த்துங்குகவரதன்
வாழுந்திருவிருதைப்பதிவணங்கிப்பணிகளியேம்
தியக்கந்தருமென்பார்தெளிதேறல்லதிற்றேறல்
தெரியாதவர்கூற்றேசுரைதிகழ்வானவருணலால்
வியக்கப்பெயர்சுரராயினர்விழிதுஞ்சலுமில்லார்
விள்ளுக்கமதுகைவிட்டிடவேண்டாமெனஔவை
உயக்கத்தினளுயிர்போமுனமொருகோடியரிட்டம்
உறவேண்டுநரரிட்டந்தினமுட்கொள்ளுதல்நன்றே. (35)

## கல்வியிற்பிரிவு விலக்கல்.

### சந்தவிருத்தம்.

நன்றுகலைகற்கவகல்ஞாயமதிருபா
நங்கையுயிர்நிற்குமெனநானறிகிலேனே
பின்றுகவலைப்படுவைபேணியவள்பால்நீ
பிய்ந்தவுறவைக்கொளுதல்பேசுமுறையேயோ
தொன்றுகுவியத்திகொடுதோகைதருசீரோர்
துன்றுகலைகற்றணுகுருதுபிறிதாமே

மன்றுணடனத்திறைவர்மாமதலைவேலோன்
வந்தவிருதைப்பதியைமானுபுகழோயே. (36)

## தலைமகளை வியத்தல்.

சந்தவிருத்தம்.

ஒங்குமலையொத்தமுலை பாய்ந்துயிர்சுருட்டும்விழி
ஒங்கனடையெய்த்தவிடை — தன்னோடே
மாங்குயில்பயிற்றுமொழி தாங்கிரதியொத்தவெழில்
வாய்ந்தெதிரில்நிற்குமட — மின்னாரே
தீங்குமிகு துட்டருயிர் வாங்குமயில்வைத்தகர
சேந்தன்விருதைப்பதியை — நண்ணார்போல்
ஈங்குவிரைவிற்கவரெ னுன்றமனதைத்தரவு
மேன்றடையணைத்தருள — வெண்ணீரே. (37)

## கட்டளைக்கலித்துறை.

எண்ணும்புகழ்விருதைக்குகவேளுக்கிருமனையார்
நண்ணும்புதுமையினையறிந்தேமங்கலமுரைக்கில்
மண்ணும்புவியிற்படைத்திடற்கோரனைமார்பொடணைத்
துண்ணும்புனிதவமுதீந்துகாத்திடற்கோரன்னையே. (38)

## நேரிசைவெண்பா.

அன்னைக்கு மாரற்கு மன்றிலுக்குந் தென்றலுக்கு
மென்னைக்கு மம்புலிக்கு மேங்கிமகள் — நின்னை
யுவந்தழைக்கச் சொன்னா ளுயர்விருதை வேலா
நவந்தழைக்கச் சேர்கசுகு ணா. (39)

## குறம்.

கட்டுத்தாழிசை.

சுத்ததவயோகியர்போல்முக்காலக்குறியுஞ்
சோர்வுபடாதேநொடியிற்சொல்லிடுவேனம்மே
இத்ததியில்நிறைநாழிநெல்மெழுகிவைப்பாய்
என்பிள்ளைக்கெண்ணெயிடிங்கெதிரினிலுட்காராய்
ஒத்தறும்மலொடுபல்லிசொல்லியதுந்தகவே
யுற்றவெளியசரீரிவாக்குமிதோநோக்காய்
இத்தனையுங்கண்டதினாலேவிருதைமுருகோன்
எப்படியும்வந்தணைவானென்பதுபொய்யாதே. (40)

## இதுவுமது.

கட்டளைக்கலிப்பா.

பொய்மலிந்திடுசூர்க்குலகாலனும்
புனிதன்மாவிருதைப்பதிமேவலவன்
பைமலிந்தநினக்கின்றுவந்தருள்
பண்ணுவானிதுநிச்சயம்பாரம்மே
மெய்மலிந்தவிச்சொற்றவறுகிடில்
விள்பொதியைக்குறத்திநானுவனே
கைமலிந்தபழங்கலைகஞ்சியுங்
காலதாமதமின்றிமுன்றந்திடே. (41)

## எழுசீர்வண்ண விருத்தம்.

தந்திரமலிந்தமுழுவண்டரிடமொஞ்சவரு
சங்கடமிகுந்தடிமை—தளராதே
கொந்திலகுகுந்தளமடந்தையரொடங்கையயில்
கொண்டுமயிலொன்றிநிதம்—வருவாயே
அந்திமதியம்புனைதிசம்பரனகங்குளிர
அன்றுகுருவென்றுதிகழ்—முருகோனே
இந்திரனுடன்சகலவும்பர்குழுவும்பணியும்
இங்கிதநிறைந்தவிரு—தையின்வேளே. (42)

## காலம்.

மடக்கு, எண்சீராசிரிய விருத்தம்.

வேண்டலருவந்துவந்துதூற்றுங்காலம்
வெங்கணைவேள்வந்துவந்துதூற்றுங்காலம்
காண்டலெணிக்கைப்பதுமங்குவிக்குங்காலம்
கவினடிசில்கைப்பதுமங்குவிக்குங்காலம்
பூண்டகரவெணந்தினமுங்கழறுங்காலம்
புயமணையவெணந்தினமுங்கழறுங்காலம்
மீண்டதிர்த்தேயென்றுயரங்களையாக்காலம்
விருதைச்சேயென்றுயரங்களையாக்காலம். (43)

## நெஞ்சுவிடுதூது.

சந்தத்தாழிசை.

காலனைத்தவிழியாரைவிட்டென்மிகு
காதலைச்சொலுமினனில்லையோ

கண்டதுந்தமதுநெஞ்சழிந்துவிர
கங்கொடென்றுயரமொழியலார்
சீலமிக்ககிளியோதிருப்புகழ்சொல்
தீரதத்தையொடுகுலவுமே
சென்றுவண்டுதிகழஞ்சமென்றவிவை
செஞ்சொலொன்றுமுரைதருவவோ
கோலமுற்றெனுயிரோடுநித்தகரு
கூலமொத்தவுயரிதயமே
கொண்டநண்பிலுனையன்றியென்றணிடர்
குன்றிடும்படிநல்விருதைவாழ்
வேலனுக்குரைசெய்வோர்புவிக்குளிலை
வேளடுக்குமுனமகிழ்வொடே
வெண்கடம்புகுரவந்தரும்படிவி
ளம்பிபொன்றிவரவிரைதியே. (44)

### மறம்.

எண்சீராசிரிய விருத்தம்.

விரைவொடெங்கள்சக்கிரிக்கொர்மின்னைநாடிவந்தனம்
வேண்டியேகொடுத்திடென்றுவிள்ளுகின்றதூதனே!
தரையிலெம்மையார்கொலென்றுசற்றுநீயறிந்திடாய்
சந்தநீடுவிருதைவேலன்றன்குலத்தினேமடா
புரையிலாவலாரிமுன்னோர்பொன்னைவேலற்குதவினான்
போற்றுமந்தவிருவர்யாவர்புகலுந்தேவரல்லரோ
பரையையொத்தமின்னையிந்தப்பாரிலெந்தமூடரும்
பார்க்கொணாருக்கீவரோசபாஷுன்ஞானப்பான்மையே. (45)

### இதுவுமது.

அறுசீராசிரிய விருத்தம்.

பாழ்பனையோலைகையிற்பற்றியேமூடங்கலென்றாய்
மூழ்பகைகளையும்யாங்கள்முடங்கலமுடங்கல்கோணல்
ஊழ்பலமாகில்நீயுமோடுகவிருதைச்சேயால்
கூழ்படுமசுரர்போலக்கொணர்முகஞ்சிதைப்பர்சேயோர். (46)

### இன்னிசை வெண்பா.

சேயாக்குறிஞ்சிதிகழ்கிழவனுயிரண்டுந்
தோயாக்குலவுந்துதிவிருதைவேலவனே

ஏயாக்குளித்தளித்தோனென்னவென்பெண்பாற்களிப்பைப்
போயாக்குவிக்கவெறுப்போ. (47)

## ஒருபொருள் மேல் மூன்றடுக்கி வந்த ஆசிரியத்தாழிசை.

1. போதம் படைக்கும் புகழ்விருதைக் கந்தனது
சூதகம் பிளக்குஞ் சுடரமைந்த வேற்படையே
வேதந் தழைக்க விடுவேலி யாகிடுமால்.

2. பொன்னகரம் போலப் பொலிவிருதைக் கந்தனது
மின்னவிருஞ் செங்கை மிசையமைந்த வேற்படையே
சொன்னவிய லுண்முச் சுழியெழுத்து மாகிடுமால்.

3. பொன்றாத சீர்த்தி புனைவிருதைக் கந்தனது
குன்றாத வன்மை கொடுதிகழும் வேற்படையே
மன்றாடு மத்தன் மனையாளு மாகிடுமால். (48)

## புறங்காட்டடல்.

கட்டளைக்கலித்துறை.

மான்குழமாதிறைவேலோன்புகழேமறைகளொரு
நான்குழலாதொலிக்கும்விருதைப்பதிநன்னுதலாய்
கான்குழம்பாருந்தனங்கனிவாயிவண்கண்டணைமுன்
தேன்குழலீந்தனையேவிடுவாயிச்சிறுபடிறே. (49)

## கலிவெண்பா.

படிமிசையப் பண்ணவன்சேய் பண்டு பதற
முடிமிசையங் கையரன் முனிந்து—பொடிமிசைந்த
மேனியரா னுக்கு விரும்பிப் பொருளுரைத்த
ஞானியறப் பாவைபெற்ற நன்மணியே—ஊனியன்ற
காயத்தை நம்பிக் கடைப்பட் டுழன்றேனிம்
மாயத்தை முற்றுமென்று மாற்றுவையோ—நேயத்தைத்
தந்ததிருச் செந்தூர்த் தலத்திலருள் வாய்மையெண்ணி
நொந்ததிக மாக நுடங்கினன்காண்—இந்த
வினையகற்ற நீயென்னை விட்டாலுன் நெஞ்ச
நினையவத்த னென்றே நெடிது—முனையாதோ

சந்தத் தருணகிரி தானீயென் றோர்தவனை
எந்தத் தருணத்து மேயிசைத்தும்—அந்தத்தில்
அன்னவன்றான் வேண்டுநல மத்தனையு மீந்தனையோ
என்னவன்மஞ் செய்தனையோ யானறியேன்—இன்ன
விதமே யினிச்செய்தால் மேதினியிற் சூன்ய
மதமே யிலங்கி வருமே—இதமேவி
ஒப்புவித்தே னென்முறைப்பா டோங்கா ரத் துள்ளொளியாச்
செப்புவித்தே நல்விருதைத் தேசிகனே—இப்புவியில்
இன்னே மயிற்பரியி லேறியடி யேன்றனக்கு
முன்னே மொழிந்த முறைப்படியே—எந்நேரம்
நற்காட்சி தந்தெனது நாட்டமுற்று மேயருளி
நிற்காட்சி செய்ய நினை. (50)

## பாண்.

### எழுசீர்ச்சந்த விருத்தம்.

நினைவுசந்ததமோக விலைமடந்தையர்மீது
நிறையுமங்கதனுல — ஞேரோடே
எனைமறந்தநுராக மதிலமிழ்ந்தனராக
இவிடம்வந்திசைபாடு — பாணனே
மினைவிடுங்கருமேக விடிநிகர்ந்ததுபாடல்
விழைகிலன்றறியாம — லேகுவாய்
சனையறிந்திலைநீயும் விருதையின்குகனுணை
சரிபொதிந்திடுவீணை — வீணனே. (51)

### நேரிசை வெண்பா.

வீணே னுளஞ்சந்தாய் விட்டே னவன்வரவுங்
காணே னுறுகண் கணிக்கரிதே—கோணேரும்
ஆன்றிரட்டு மானனத்தா னன்பாய்ப் பணிவிருதை
மூன்றிரட்டு மானனத்தான் முன். (52)

### கட்டளைக்கலித்துறை.

முன்னம்பலவன்றிகழ்முடியீசன்முழங்குதமிழ்ப்
பொன்னம்பலவன்புகழ்விருதைக்குகன்பூமகள்கண்
பன்னம்பலவன்பணிமுருகோனடிப்பத்திசெய்வோர்
இன்னம்பலவன்பிறவியிற்றோயாதிருப்பவரே. (53)

## சம்பிரதம்.

இரட்டையாசிரிய விருத்தம்.

இருநிலமதிற்றந்தமாவினைத்தின்னுவேன்
ஏய்ந்தகுலவரைகடம்மை
யார்கரத்தூடுமனமகிழ்பெறக்காட்டுவேன்
எட்டானையும்பூவிலே
ஒருநிலைபெறுந்தன்மையோதுவேன்வேங்கைதனை
உண்மைபெறுமரமாக்குவேன்
உறுகடாவரவிடையையுன்னுமுன்னேற்றுவேன்
உறைபனியோர்பெண்ணாக்குவேன்
வருநிலவுடன்ஞாயிறுங்குடத்திற்புகுத
வைப்பனத்திக்குலமெலாம்
மாற்றியுயர்யானையர்க்காட்டுவேனிவைநுணிய
மதிவலோர்க்கெளிதாகுமால்
கருநிருதரைக்கொன்றவிருதைமாநகர்மேவு
கந்தவேளடிபரவிலோ
கருதரியவட்டமாசித்தியொடுமுத்தியுங்
கைவருதல்நிச்சயமரோ. (54)

## இரவுக்குறிவிலக்கல்.

கட்டளைக்கலிப்பா.

சயமடங்கலவுணக்கரிக்கெனச்
சம்புதந்தகடம்புறுதோளினன்
அயமடங்கவிவர்ந்தவனெங்கடம்
அப்பனும்விருதைக்குகனைத்துளாய்!
நயமடங்கலும்பெற்றிடக்கங்குவில்
நண்ணலன்னையுநாயுமுறங்கிலார்
இயமடங்கவிடுமொழிப்பேதைநின்
இன்னுயிர்க்குக்கரைந்திளைக்கின்றதே. (55

## மதங்கு.

தாழிசை.

இலகுந்திருவேலோனுறையிடமாமிளிர்விருதை
எழில்வீதியினடுநாடகமிடுமாமதங்கியரே

உலகும்புகழ்கணைவில்கரியுயர்தேரொடுமிவுளி
ஒளிர்மங்கையர்காலாளெனவோங்குங்கவினாற்றே
பலகும்புறுவிடர்மாமனப்பருங்கோட்டையழிக்கப்
பாசாங்கொடுபாசாங்குசம்பற்றிச்சுழல்கின்றீர்
விலகுங்கலையதனாலிருவிண்டுப்பதிநேரே
வெளியாயினசெவ்வாய்நலம்விரும்பித்தருவீரே. (56)

## கைக்கிளை.

### மருட்பா.

தருமலரும் வாடுந் தடங்கண் ணிமைக்கு
நிருமலத்தாள் பூமிசையே நிற்க—வருமதனால்
அணங்கலள் முருகோ னணிவிரு தைப்பதி
வணங்கலர் மதியை வாட்டுஞ்
சுணங்கலர் மாமுலைச் சுரிகுழற் றிருவே. (57)

## எழுசீராசிரிய விருத்தம்.

திருவினைப்பொருளாமருவினைதெருளாச்
சிந்தையால்நிந்தையாமதனால்
வருவினைப்பெருக்கேகருவிபின்னாருக்கே
வஞ்சமேய்நெஞ்சமேமதியோ
இருவினைச்சேறேயொருவிடுமாறே
எண்டிசைமண்டிசைவிருதைக்
குருவினையுமையாள்கருவினையபையாள்
குழகனையழகனைநினையே. (58)

## பனிக்காலம்.

### எண்சீர்ச்சந்த விருத்தம்.

நினைப்போலவுலகூடெனக்கானபொருளே
நினைத்தாலுமிலைகோமளக்காமர்திருவே
தினைப்போதுமகலேனெனக்கூறிமறைதேர்
திருட்டாசைமிகவேகுமப்பாதகருமே
முனைப்போரில்வருசூரினைக்காயுமுருகோன்
முளைத்தாள்விருதைமாநகர்க்கேயவிலையே
சினைப்போதன்விதியோபனிக்காலமுயிரே
தினற்காயதினிவாழ்பனிக்காலநலமே. (59)

## வஞ்சிவிருத்தம்.

நல்விரு தைக்குக னாருட்
செல்விய டைந்திடு செய்யவல்
குல்விழை நெற்றியுங் கொங்கையும்
வில்விர வும்மர விந்தமே. (60)

## களி.

நேரிசை வெண்பா.

விந்தைதரும் வேலன் விருதைப் பதிக்களியேம்
மொந்தைமதுச் சீரறியார் மூடரே—சந்தைச்
சடைக்கஞ்சா வானந்தஞ் சாணிறைத்தாற் கூற்றின்
படைக்கஞ்சா வானந்தம் பார். (61)

## பள்ளு.

தாழிசை.

பாரோதிப்பணிமுருகவேளிசைபகரும்பைங்கிளித்தோளினர்
பரமனுக்கொருகுருகிளைத்தெழுபகைமுருக்கியதிறலினர்
காரோதிக்குழற்குறத்திகுஞ்சரிகணவர்மாமயிலூர்தியார்
கவினுஞ்சீர்திகழ்விருதைமாநகர்க்கழனித்தொழியிலிறங்கியே
நீரோதிரும்பும்பரம்புந்தடுத்துநெடுங்கண்ணைமிகச்சிமிட்டியோர்
நிபுணர்தங்களைச்சருவிமயக்கிநிறையுமன்பொடுங்குலவுரீர்
வேரோதின்னமிலாதநாற்றிவைமிளிருமற்றவையணியதாய்
விலகிடாமலுநெருங்கிடாமலும்விரைந்துநடுமின்பள்ளீரே. (62)

## இடமணித்தென்றல்.

கட்டளைக்கலித்துறை.

பள்ளத்திடுக்கநெறியாளர்தோம்போற்பணைமுலையாய்
உள்ளத்தினிற்றயங்கேலெமதூரிவ்வுழியிருந்து
மெள்ளத்திருக்கரங்கொட்டிடிற்கேட்குமிகவணித்தாய்
விள்ளத்திவள்ளிமணவாளன்வாழும்விருதையன்றே. (63)

## பிச்சியார்.

எண்சீராசிரிய விருத்தம்.

விருதுபுகல்செஞ்சூட்டுவெண்சேவற்கொடியான்
விரும்பியுறைவிருதைநகர்மேவுபிச்சியாரே

கருதுதிரிசூலமொளிர்கல்லாடைமுதலாங்
காட்சியொடுநீர்திரிதல்மாட்சிமையாலும்
வருதுகடீருபதேசம்பெறத்தடையேயில்லை
வாய்ந்தகும்பகோணமுன்னர்மகிழக்காட்டிடிலோ
எருதுகைப்பான்றனைப்போலயாமணைந்துவேளை
எரிப்போமின்றேலெமர்நுஞ்சார்பிச்சியாரே. (64)

## அறுசீராசிரியவிருத்தம்.

பிச்சிதளவஞ்சூட்டிப்பெண்ணைமருங்கிற்கொடுகோன்
பிறங்கும்வேலோன்
உச்சிதமாம்விருதைநகர்க்கோவிலிற்ப்பாயுடன்வணங்கி
ஒருசார்நின்றேன்
மெச்சியவன்றிருநீற்றைமகள்தலையில்விரும்பியிட்டான்
வீடுசேர்ந்தேன்
முச்சில்மறந்தவன்பெபரேமொழிகின்றாளடியக்கா
மோசந்தானே. (65)

## கலிவிருத்தம்.

தானக் களியே தழையும் விருதை
மானக் களிறூர் வடிவேன் முருகா
தேனக் களியார் செறிகே சமுறு
நானக் களிமார் நலனு லழிகோ. (66)

## இரங்கல்.

சிலேடை. எழுசீராசிரிய விருத்தம்.

கோதலைநத்தருகொண்கரைவிட்டனைகுளிர்மதிவெப்புறவே
சாதலையொத்தணிவாய்நுரைகக்கினைசலனமுமுற்றனையால்
ஆதலைமுட்டுமென்னேர்மகள்போலிசையணிவிருதைக்குகன்பால்
நீதலையிட்டனையோபுகலாய்விரிநீர்மைபெறுங்கடலே. (67)

## கொற்றியார்.

கட்டளைக்கலிப்பா.

கடனிறத்தொருவர்க்கடிமைப்படு
கட்டமைந்தொளிர்கொற்றியரேமராத்
திடனிகுத்தமொருகலைநம்மிரு
செய்யகட்கணையோமெதிர்ந்தோர்தமை

உடனிகழ்ச்சிப்பொருளெனமெய்யுயிர்
உண்ணலாயினநன்றிந்தமார்க்கமே
அடனிவந்தவிருதைப்பதிக்குகன்
ஆணைகண்டடுத்தாலழகாகுமே. (68)

## இதுவுமது.

நேரிசை வெண்பா.

அழகா திருவிருதை யப்பா முருகா
குழகா வெனிற்றொண்டர் கொள்வார்—பழகாருக்
கொற்றியா ரேதருவா ரும்பணத்தைத் தந்தாலே
கொற்றியா ரேசிறப்பா கும். (69)

## கூதிர்காலம்.

எண்சீராசிரிய விருத்தம்.

குளிர்வடக்குத்துருவத்தைத்துருவும்வன்மை
கொடுவாள்தைப்பதுபோலக்கோறல்கண்டே
ஒளிர்வயனத்தமிழ்ப்புலவோர்வாடையாம்பேர்
உறப்புணர்த்தியல்வழியாலுரைத்தார்போலும்
தளிர்வளமேனியரோமெல்லியர்நான்மேலுந்
தனியாகத்தவிக்கின்றேன்சற்றேகண்பார்
மிளிர்வடிவேலாவிருதைமுருகாதொண்டர்
வேட்கையெல்லாமினிதினருள்மெய்மைத்தேவே. (70)

## நற்றாயிரங்கல்.

கட்டளைக்கலித்துறை.

தேங்கடம்போன்விருதைப்பதிமேவுந்திருவனையீர்
வேங்கடம்போகத்தகுமென்றனம்பொருள்வேறுகொண்டே
யாங்கடம்போலியர்சூதறியேமென்றொரேதிலன்பின்
பாங்கடம்போர்விழியாள்படர்ந்தாளென்னபாவமிதே. (71)

## கொச்சகக் கலிப்பா.

பாவஞ்சகமடுக்காப்பண்பருளும்வேலவனை
நாவஞ்சகம்கற்றிநல்விருதையிற்றொழுதாற்
பூவஞ்சகமடுக்கும்போரானயன்பகட்டிற்
றுவஞ்சகமறலிசற்றுநம்மைச்சாராரே. (72)

### எண்சீராசிரிய விருத்தம்.

சாரானைமுதலெறும்புவரையாவிக்குட்
    சார்ந்தானைச்சட்சமயசமயாதீதப்
பேரானைமுச்சத்திபெற்றோங்காரம்
    பேர்ந்தானையுரைக்கவொண்ணாப்பிரணவத்தைத்
தேரானைமுனிந்துசிவகுருவாயோதத்
    தேர்ந்தானைப்பகைத்தவர்தாஞ்சிறந்துவாழப்
பாரானைமுதுவிருதைதனில்யானுய்யப்
    பார்த்தானையன்றியெவர்ப்பாடுவேனே. (73)

## வேனிற்காலம்.

### கலிநிலைத்துறை.

பாடுற்றதமிழ்யனோர்கொழுகொம்பிலாவஞ்சிபடுதன்மைபோல்
வாடுற்றவிதமேதுமறியார்கொல்விருதைக்குள்வருகந்தவேள்
பீடுற்றமலையத்தமிழ்சந்துமுத்தென்பபெருகங்கியாம்
சாடுற்றசிறுதென்றலூதுஞ்சிவிறிவேனிற்றகைநன்றரோ. (74)

## இடைச்சியார்.

### எழுசீராசிரிய விருத்தம்.

நலந்தருகுகவேள்விருதைமாநகரை
    நண்ணியேயினியமென்குரலாற்
பலந்தருபாலோபாலெனப்பகரும்
    பருமுலைச்சிற்றிடைச்சியரே
புலந்தருமுப்பால்மோக்கமேதரும்நீர்
    பொறுத்தமுப்பால்கொளுமிரண்டு
கலந்தருகடமேமோக்கத்தினிடைமெய்
    களைந்ததாலளைதரக்கடனே. (75)

### கட்டளைக்கலித்துறை.

கடத்தும்பிசோதரன்மாவிருதைக்குகன்கண்ணுமன்பர்
கடத்தும்பிறப்புமினியனுகாமற்கழலிணையாற்
கடத்தும்பிரான்பொறியாறுரைக்கார்தங்கழுத்தினில்வி
கடத்தும்பிழுக்கும்பொழுதேதுசெய்வர்வெங்காலனுக்கே. (76)

## மேகவிடுதூது.

நேரிசை வெண்பா.

காளமே கங்காளென் காதலைநீர் சீர்விருதை
யாளமே வுங்குகன்பா லாதரவாய்—நீளமே
போயலையா தேயுரைத்தாற் புண்ணியங்கா ணென்னிருகண்
பாயலையா தேநிறுத்தற் பாற்று. (77)

## மடல் விலக்கு.

எண்சீராசிரிய விருத்தம்.

பாகநயத்தமிழ்மலிந்தவிருதைவேலன்
பாதமறவாதசொன்னப்பாவைபோல்வாள்
ஆகநலம்பெறவேண்டிமடலேறூர
ஆசைகொள்ளுமன்பாநிற்கழகோதிட்டும்
வேகநயனஞ்சிமிட்டாபவளவாய்தான்
விழைந்தொருமுத்தந்தருமோமின்னாட்குன்மேல்
மோகநகைசமலிந்திருக்குமுறையால்முன்னோர்
மொழிந்தவுயர்பிரமமணமுடித்தல்நன்றே. (78)

## தவம்.

எழுசீர்ச்சந்தவிருத்தம்.

நன்றிக்கடநிலையென்றற்பொடுமதை
நம்பிப்புனல்கனல்முழையூடே
துன்றிக்கனியிலைதின்றெய்த்தலமரு
துன்பிற்கழிவதுதவமாமோ
தென்றிக்கணையுதைநம்பர்க்கொருகுரு
செஞ்சொற்றிரளணிமுருகோனே
என்றிக்கணமவன்மன்பொற்புவிருதை
யின்கட்பணிகுதல்முறையாமே. (79)

## வலைச்சியார்.

எண்சீராசிரியவிருத்தம்.

முறையுணர்ந்தவடியருள்ளமுண்டகத்திலாடுமெம்
முருகவேடன்விருதைமேவுமுரல்வாய்வலைச்சியீர்
நிறையும்வாளைகெளிறுதேளியயிரைகூனியுழுவையும்
நித்தைமேவும்பொத்திசள்ளைநெஞ்சமும்மலங்குமால்

தறையுதித்தவொருவராலுந்தாங்கொணுவெளிச்சைதான்
சடுதியாயஞ்சேல்விரும்பிச்சாரவாவல்தருகுவேன்
குறையுறுய்மெச்சுறவுநன்றுகொள்கவென்றுகூறிலோ
கோடிதண்டனிட்டுநீர்சொல்கூட்டமுற்றும்பெறுவனே (80)

## மடக்கு.

### கட்டளைக்கலிப்பா.

பெற்றுவப்பதுசந்தத்தின்கண்ணியே
பேணல்வேடர்வசந்தத்தின்கண்ணியே
பற்றுவார்க்குத்தரலணித்தோகையே
பரிவுகூர்பரிமாலணித்தோகையே
துற்றுவள்ளிகைத்தேன்றிணைமாவுமே
துணித்ததும்பனைத்தேன்றிணைமாவுமே
முற்றுமாற்றலும்வானவிருதையே
முருகனூருயர்வானவிருதையே. (81)

### குறளடி வஞ்சிப்பா.

விரும்பித்தினம் பெரும்பித்தினன்
போலேடணை யாலேதளர்
துனிநீறிட வினிநீவலி
தந்தாலல துந்தாணையுண்
கருவிளங்கனி பொருவிதங்கெடு
வேனுதலின் மேனுளொதிர்
உற்றேதிய சொற்றேணிடப்
பைந்தோகையில் வந்தோகையொ—டருள,
விரைகுக சீர்மலி விருதை
வரைகுக பவளமால் வரைநிறத் தோனே. (82)

### ஈற்றடி மிக்குவந்த நான்கடிக்கலித்தாழிசை.

தோள்பன்னி ரண்டிற் சுடர்வடிவே லைப்புனைந்த
வேள்பன்னி யோரிரண்டோன் மெய்மதங்களாற்றுருங்கே
ஆள்பன்னி யத்தாகா ஞர்விருதைக் கந்தனெனச்
சூள்பன்னிப் பாடாதார் தோன்றுநல மென்னே
சுகோததிகாங் கேயனெனுர் தோன்றுநல மென்னே. (83)

## பாலனைப்பழித்தல்.

கட்டளைக்கலித்துறை.

என்னேரொளிதருவேலோன்விருதையினில்விரும்பு
முன்னேயெனதுதரத்தேய்வலம்புரிமுத்தனையாய்
பின்னேருயிர்குற்றுகரமுமெய்யும்பிரிப்பதொத்துன்
நன்னேசத்தந்தையையும்பிரித்தோட்டவோநண்ணினையே. (84)

## கலிவிருத்தம்.

நண்ணுமாகிரியுருக்கிடுங்கிரியை
நவையில்பூரிகலியாணியாம்
பண்ணுமாசறுவிளக்கிலிட்டதிரி
பற்றுமாறுசெயும்பான்மைபோல்
எண்ணுமாறுபொறியாலுகந்தவுரு
வேற்றினல்விருதைமாநகர்க்
கண்ணுமாபதியளித்தகந்தனருள்
காணலோடுவருங்கதியுமே. (85)

## தலைமகளை வியத்தல்.

எழுசீர்ச்சந்தவிருத்தம்.

கதியருளுமுருகனுறைவிருதைநகரிடைநிலவு
கமலமகளனையமடவீர்
முதியவரவெளிர்பல்தலைமிசையிவுலகுறையுமென
மொழிவருமதிடையொரரவோ
பொதியகிரிருமலையுமிருகடலுமணிசெய்பல
பொருளுமொருசுமைகொள்தகவால்
மதியறிஞருமைவலியரெனல்தகுமவ்வரவரசு
மனமறுகியொளிதல்பிலமே. (86)

## வேற்றொலிவெண்டுறை.

பிடிமகளு மரைமகளும் பிணங்கியிகல் வதுகண்டே பெரிது வக்கு
முடிமறையின் முடிப்பொருளாம் முருகனது விருதையினை முறையாத் தாழ்ந்[து]
வந்த னைபுரி யாமதி யினர்தாம்
நிந்த னைக்கடல் நீந்தியுய் யார்களே. (87)

## வேதியர்வினுதல்.

### எண்சீராசிரிய விருத்தம்.

உய்வமைக்குஞ்சதுர்வேதமுணர்ந்தோரேசீர்
உறழுமொருகாளானையொப்பமுக்கோற்
கைவயின்றழைக்குடைகொள்பகவனாரே
க்ந்தவேள்விருதைநகரிடையோர்காளை
பெய்வளையாமெங்கள்தவக்கொழுந்தைக்கூட்டிப்
பெற்றவயிறெரியவெங்கோபெயர்ந்தானையோ
னைவதுசொல்லத்தகுமோவுமைச்சந்தித்து
நடக்கின்றானோவிரங்கிநவிலுவீரே. (88)

## மஞ்சரியார்.

### எண்சீராசிரிய விருத்தம்.

நறையவிழ்குரவுபுனைமுருகனெழில்விருதை
நகர்மருகினில்மலரோமலரெனவுரைபகர்வீர்
குறையறுகுடலையிடைமலிபலவகைமலரோ
குமரியர்பெறுவரலொருபுருடரும்விழைபார்
நிறையணிவகுளமதன்கிடுகணையவயவமா
நிலவுவவுமதுடனாடவைகளிலிடைமலரோர்
மறையலர்முலைத்தாரும்விலையெதுவெனக்கூறும்
மஞ்சரியாரேநேமஞ்சரிநேர்வீரே. (89)

## வஞ்சித்துறை.

வியா நிலையருள்
சேயாள் விருதையை
வாயா லுரைசெய
ஏயா வுறுகணே. (90)

## வெளிவிருத்தம்.

கந்தா குறமகள் கணவா வடியேற் கிரங்காயோ
நந்தா விருதையில் நடனா வடியேற் கிரங்காயோ
அந்தா ரகநிலை யருளே யடியேற் கிரங்காயோ
சிந்தா குலமது தெறவே யடியேற் கிரங்காயோ. (91)

## சுரம்போக்கு.

கட்டளைக்கலித்துறை.

இயலார்விருதைக்குகனருளாற்பெற்றவென்னொருபெண்
மயலார்தருமிராமேசுரம்போகற்குவாஞ்சையென்றாள்
கயலார்கணியமாவாசைக்குச்செல்லக்கடமையென்றேன்
பயலார்கடத்தினனோநெஞ்சமையோபதைக்கின்றதே. (92)

## நேரிசை வெண்பா.

பற்றவப மாக்கும் பகைமூவ ருட்டலைமை
பெற்றவய னைக்கறுவும் பெற்றியினாற்—கொற்ற
வடிவேலார் சேய்விருதை வாழ்த்தன் புடையோர்
மடிவேலார் சேகரமா வார். (93)

## பாண்.

அறுசீராசிரிய விருத்தம்.

வார்கடல்சுவற்றும்வைவேல்வரதன்வாழ்விருதைப்பாணா
சார்கடனெண்ணார்க்காகத்தந்திரிதெரிக்கவேண்டாம்
பேர்கடபோதமேறப்பெறுவதம்பரத்தையாரோ
ஓர்கடவதுவொன்றில்லையொழியுன்கைச்சுரைக்குத்தீங்கே. (94)

## நாணிக்கண்புதைத்தல்.

எண்சீராசிரிய விருத்தம்.

தீங்கைமதன்விளைப்பதினாலாரும்ராசிச்
சீருடையாய்நானஞ்சோதிடங்கேட்டுற்றேன்
பாங்கைமிகுத்திடுநினக்குப்பத்தைநேரப்
பகையறுமென்பதுதிடந்தான்பாரென்னுமுன்
வேங்கைமரமானகுகன்விருதைதன்னை
விரும்பாப்புன்பனிதரைப்போல்விரைந்துநீயும்
மூங்கையொத்துநினக்கேழைநான்காணாதே
மூடியிருமூன்றுதரல்முறையாகாதே. (95)

## பதின்மூன்றுசீர்ச்சந்த விருத்தம்.

ஆதிபகவன்முதலேயுலகமென
வோதுகுறளுமுணர்வீர்மனிதரிட
மாசைபெறுதலுனியேபவரையெழின்— மலர்மாரா

நீதியருளுமதுருந்தனபரம
நாதசசிமின்வலவாவெனநிதமு
நேயமொடுதமிழிலேதுதிகள்பல— தரலாமோ
பாதிமதியணியுமாபதியடிமை
யானவொருவர்புகலூர்பரவியிசை
பாடல்தகுதியெனல்போலுறுதிகொடு— புலவீரே
போதிலுறைதிசையகோவெனவலற
மோதுமுருகனமர்சீர்விருதைநகர்
போய்மதுரிதகவிபாலவனதடி— புனைவீரே. (96)

## மருத்து.

### எழுசீராசிரிய விருத்தம்.

புத்தியந்தமுங்கொள்சேய்பெருதவர்க்கும்
 புகலுநாலாயிரத்தொகைமேல்
நத்தியங்குடலையுருக்கிடுநோய்க்கும்
 நயமருத்துரைமருத்துவர்யாம்
நித்தியங்குவிக்கும்வினைப்பிணிக்கொன்று
 நிகழ்த்தினனகத்தியமுனிநற்
பத்தியஞ்சிறந்தாற்பலிக்குமெய்விருதைப்
 பதிக்குகற்கன்பெனலதுவே. (97)

## இரங்கல்.

### நேரிசை வெண்பா.

அட்டதிக்குப் பந்தனஞ்செய் தாலும்விரு தைக்குகனே
பட்டதிக்கு முக்குமொரு பாரதமாம்—சுட்டதிக்கு
வந்தனஞ்செய் யப்பிழைக்கு மாவருள்செய் பெண்கலுழ்ந்தாள்
சந்தனஞ்செய் யப்பிழைக்குத் தான். (98)

## வருகை.

### தாழிசை.

பிறவிக்குறைதீரொளிவருகபேசாமோனப்பொருள்வருக
 பேணுஞ்சிவனர்குருவருகபிடிமாமகள்சேரிறைவருக
குறவிக்குருகுங்குகவருககுக்குடக்கேதனவருக
 கோலமயிற்சேவகவருககொக்குக்கொருகூற்றுவவருக

துறவிக்குழுவின்மணிவருகசுகம்பேணியதோள்வலவருக
சுடர்வேலேந்துங்கரவருகதொடிக்கைக்கவுரிமகன்வருக
புறவிக்குகந்தபரவருகபுகலும்புலிங்கத்துருவருக
பொன்றுப்புகழ்சேர்விருதைநகர்புரப்போய்வருகவருகவே.()

## நிலமண்டிலவாசிரியப்பா.

வருகடல் குடித்திடு வரற்குமோர் கிளிக்கும்
பெருகடல் விளக்கும் பிரணவ முரைத்த
பவளமால் வரையே படிறே மிகுந்து
துவளமால் வயின்நா டொறுஞ்சுழன் றிளைக்கும்
வண்ணப் பம்பர மனத்தேன் விளம்பும்
விண்ணப் பம்பர விமலா கேண்மதி
நின்னருள் பெற்றே நினைத்துநெக் குருகி
மன்னருள் வயக்கும் மாட்சி யோடே
இத்தரை யுதித்த வெழிற்கழை வனத்தான்
பத்தரை யகலாப் பண்பினன் காட்டும்
பெற்றிமுற் றறியும் பீடிலே னெனினும்
பற்றிமுற் படுநின் பதத்துணை மறவேன்
ஆகையி னால்நீ யணிமிகு பச்சைத்
தோகையி லேனுந் துளைக்கைமா மதம்பெய்
பொருப்பினி லேனும் புரியுறு மிரண்டு
மருப்பினி தமைந்த மைமிசை யேனுங்
கூர்வடி வேலுங் கொடுங்கணை வில்வாள்
சீர்வடி வங்குசந் திரிசிரச் சூலங்
கின்னங் கலையுங் கேடகம் வயிரந்
துன்னங் கயிறு சுரிமுகஞ் சக்கரம்
ஆதிய தாங்கு மவிர்பதி னறென்
றோதிய வுருவி லுகந்தெது கொண்டும்
வள்ளிக் கொடியும் வாரணக் கொடியும்
நள்ளிப் படர நடுவினி லமர்ந்தே
என் றனே ரிலங்கி யெண்ணமுற் றருளித்
துன்றனே கமயற் றொடக்கறுத் தாள்வாய்
வெங்கா லன்கை வீறட நினைப்போர்
தங்கா லங்கி தனினுறத் தவஞ்செய்

நந்தா விதமென நல்லோ திமங்கள்
செந்தா மரைமிசை திகழ்தடம் பொலியும்
வளம்பெறு விருதை மாநகர் வாழ்தற்
குளம்பெறு சண்முக வுசிதசீ ரியனே. (100)

திருவிருதைக்கலம்பகம்

முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

—000000—

நேரிசை வெண்பா.

தண்டபா ணிக்கடிமை சார்பார்த்த சாரதிப்பேர்
கொண்டபா வூரான் குகற்கன்பாய்—விண்ட
விருதைக் கலம்பகத்தை வேண்டுநரா வாரே
மருதைக் கடிந்தவிண்டு வாய்.

குருபாதமேகதி.

தெய்வமே துணை.

உ

குருவே துணை.

—000000—

# திருவிருதைத் திருப்புகழ்.

காப்பு.

நேரிசை வெண்பா.

பொன்னே ரிசைவிருதைப் பூங்கடம்பற் கோரா று
தென்னே ரிசைவண்ணஞ் செப்புதற்கு—முன்னே
இலங்குகுரு நால்வா யிபமுகனே டென்னுட்
டிலங்குகுரு நாதன் றுணை.

தனன தானன தானன—தனதானா

கடலைநேர்விழிமாதர்கள்
மயலினுடொறுமேபுழல்
கசடுமாறிடுமோர்நிலை— பெறுவேனோ

கனகமேபொருளாமென
வெவர்பினைகியுநாணுறு
கவலைநோய்விலகாமையி— னலிவேனோ

உடலைமாவினையாவியை
யுனதெனாவிடுமாதவ
ருபயசேவடிநாடியு— மகிழேனோ

உலகெலாம்வலமாயொரு
நொடியிலேவருதோகையி
லுவகையோடெதிர்தோணிட— நினைவாயே

சுடலையாடியநாயகர்
மதலைதேசிகனாவரு
சுகுணபூரணனேயெழில்— முருகோனே

சுரகுலாதிபன்மாமகள்
குறவர்காரிகைதோய்தரு
சுமுகவாரணகேதன— முடையோனே

விடலையாகியவோர்கிளி
யுரைசெய்தேனிகர்பாடலில்
விழைவுகூர்கிருபாநிதி— யெனலானாய்

விரிசரோருகமீதுறை
வனிதைமாரருளேநிறை
விருதைமாநகர்மேவிய— பெருமாளே. (1)

தய்யத்தன தனனத் தனதன—தனதானா.

ஒள்ளிக்குவில்மதனற்படையெனும்
வள்ளத்தனமகளிர்க்குடையென
துள்ளத்தினிலுனதற்பணுவள— வமையாதோ

உய்தற்குளநெறிவிட்டிழிவுறு
கள்ளக்கவியுரைதுர்ச்சனர்முழு
தொல்கச்செயும்வலிபெற்றுலகினின்— மிளிரேனோ

வெள்ளிப்பணமொடுபொற்பணியுயர்
மெய்மைப்பொருளொனவித்தமியனும்
வெஃகிப்பிறர்கடைநிற்குதலினு— மகலாதோ

வெய்யிற்றிகழுயில்மைக்கொடுநடி
புள்ளிச்சிகிமுதுகிற்றினம்வரம்
விள்ளத்திருவுளமிக்கெதிர்வர— விசைவாயே

வள்ளிக்கொடியுலவிக்கவணெறி
கொல்லைக்கிடையணுகிக்கிருபைசெய்
மையற்பிணியொழிதற்கெனவடி— பணிவோனே

மல்லுக்குறுமசுரக்களைவவி
கெல்லிச்சுரர்தலைமைப்படவிடு
வள்ளற்குகவமலச்சரவண— பவவேளே

தெள்ளித்தமிழருணைக்கிளிகவி
சொல்லப்புனைசுகுணக்குருபர
தெய்வக்குழுமுழுமைக்கறுமுக— முடையோனே

செய்யிற்படுதரளக்குவியலை
யள்ளிக்கடைசியர்புட்கடிதரு
செல்வத்திருவிருதைப்பதிவளர்— பெருமாளே. (2)

தந்தான தானதன தானதன தானதன—தனதான

கொந்தாகுமாமலர்கள்சூடிவிழியாலெதிரில்
வந்தாரைமோகவலைவீழ்விடுபாதகிகள்
குன்றேடுசிறுமுலைமேவியநுராகமுறு— மகிழ்வாலே

கொண்டோய்விலாமனிதிமேகமெனவேயுதவு
சண்டாளர்மீதுதமிழாலினியமாலைபல
கும்பாகநாளும்வனைதீயரொடுநானிகலி— யிளையாதே

சிந்தாகுலாதியறுமாதவர்கள்பாதமலர்
நுண்டாதெனுதுதலைமேலமையும்வீறுகொடு
செம்பாகமானகவியோதியுனதாளனவு— மமைமாறே

திந்தாகுதீதரிகுதாதகிடதோமெனந
டப்பேணியாடுமயிலேறிவடிவேல்தழுவு
சிங்காரரூபமொடுசேவைமறவாமனித— மருள்வாயே

கந்தாகுகாகுறவரேனலிடையோர்கிழவ
னென்றேகிவாய்குழறிநீலநிறமாதழகு
கண்டார்வமாயவள்கைமாவுமுயர்தேனுமுணு — முருகோனே
கங்காளர்காதில்மறையோதுகுருவேபதின்மர்
தொண்டேனுமால்மருகனேமலையெலாமனது
கன்றுமலாடுபரனேபரவுகீரனிடர் — களைவோனே
உந்தாகுவாகனகணேசன்மகிழ்சோதரப
லங்கூடுசூரர்குலகாலவருணைபுரியில்
உய்ந்தாகம்நீறுபடலாலொர்கிளியானவனை — யணிதோளா
உங்காரநாதவறுகாலளிகள்வீதிதொறும்
வெங்கோபயானைமதநாறுதலினலணுகி
உண்சீரருவிருதைமாநகரில்வாழவரு — பெருமாளே. (3)

தனனத்தனதன — தனதான

கமலத்தயன்மதன்
மறவிப்பயல்விளை
கசடுற்றடிமையு — மொழியாதே
கருணைக்கடலென
வருமெய்த்தவரடி
கருதிப்பணிவது — தவிராதே
முமலக்கடையரை
யணுகித்துதிபகர்
முழுமைப்புலவரை — மதியாதே
முதிரிக்கிணைமொழி
யிருவர்க்கிடைமயில்
முதுகிற்றினம்வர — விசைவாயே
அமலக்குருபர
மலயக்குறுமுனி
யழிவற்றிடவிடு — குகநாதா
அசுரக்குழுவினர்
மடியக்கறுவிநல்
அமரர்க்குயர்நிலை — யருள்வோனே

விமலப்புயமிசை
யொருகுக்குடமொடு
விகிதக்கிளிபுனை— முருகோனே
விரிமுட்கனிமது
பெருகிப்பொலிதட
விருதைப்பதியுறை— பெருமாளே. (4)

தனனதனத் தனனதனத்—தனதானா

பொதியமெனக்கிளருமுலைக்
கொடியவருக்குளமறுகிப்
புனிதநெறிக்கயல்விலகிக் — கெடுவேனோ
பொலியொர்கடைத்தெரிவிலுரித்
தினரிலதெய்த்திடுஞமலிப்
புரையமுடிப்பொருளுணரத் — திரிவேனோ
பதியமனப்புலவர்தமைத்
திரணமெனக்கருதுநர்சொற்
படியுனைநித்தமுமணுகித் — துதியேனோ
பளபளெனக்கதிர்விடுசத்
திரமதுகைக்கொடுமயிலிற்
பகலினுமெற்கெதிரில்வரற் — கிசைவாயே
சதியலகைக்கணம்வளையத்
திரிபுரைவெட்கிடமுன்நடித்
தவனறியப்பொருளுரைசற் -- குருநாதா
சகுணமுநிர்க்குணமுமுடைப்
பதகுககுக்குடதுவசச்
சரவணவிற்குறவர்மகட் --- புணர்வேலா
திதியருள்புத்திரரையழித்
துயர்புகழைச்சிகரிதனிற்
றிகழ்கிளிசெப்பியகவியைப் — புனைதோளா
தினகரனைப்புகவிடுதற்
கிலதுசெயத்தகுபுரிசைத்
திருவிருதைப்பதிமுருகப் — பெருமாளே. (5)

தாத்ததன தந்ததன
தாத்ததன தந்ததன
தனதான தனனதன
தனதான தனனதன — தனதான

கூற்றுவனைநஞ்சைவடி
வேற்படையையம்பைநிகர்
கொளுமாயவிழியுடைய
மடமாதரடிவருடி
யாக்கைதனையங்கசனெய்
பூக்கணைபிளந்ததினி
யறிவேதுநிலையிலை
யருள்கூருமெனவுரைசெய்
கோட்டிமிகுவண்டர்மிசை
பாட்டினினமன்பிலிசை
குடிகேடர்மலிசபையி
லொருபோதுமணுகியுற— வடையாதே
கூர்த்தநெறிகொண்டதிரு
நீற்றையுடலொன்றியருள்
குருவேடமுதலியகொ
டுலகூடுமெனிதருய
நூற்றெருகுதிவிண்டவர்கள்
தாட்டுணையினுண்பொடியை
நுதலோடுதலைநிறைய
வணிவோருமுனதுபுகழ்
கோத்துமகிழ்தொண்டர்களும்
நாத்திகமதங்கெடவெல்
குழுவோருமெனையுமொரு
சிறுதோழனெனுமுரிமை— படையேனோ
மாற்றுயருமம்பொனுறு
வேட்கைபிடருந்துதலின்
மதியினர்தமதுதயை
யினைநாடியுடலைமுழ
மாக்கிவலிகுன்றியவர்
வாக்கில்வருகின்றவினை

யழியாதுசெயினுமிது
பழுதானதெனமுடுகி
வாட்டவழியின்றியுழல்
கேட்டிலினுநொந்தடிமை
மடியாமலுயருநிலே
பெறநாளுமுறையிடுத— லறியாயோ

மாத்திரையெனும்பொழுதி
லாக்கமுடனண்டமுழு
வதுநாறுதரம்விரைவில்
வலமாகவருகலப
மேற்குறவர்வஞ்சிசுரர்
பூட்கைதருநங்கையொரு
விபரீதமிலதுவல
மிடமேவவபயமளி
மாப்புனிதவங்கையயி
லேற்கவெதிர்வந்துநித
மடையேனுமுயுமினிய
நலமோகைபெறுமனதொ— டருள்வாயே

கீற்றுமதிகங்கைசுருள்
பாப்புதழைகொன்றைபுனே
கிளர்வேணியமலன்விட
நுகர்வாயனிகல்மதனே
நோக்கியெரிசம்புநகை
யாற்றிரிபுரங்கருது
நொடிநேரமதிலழிய
விடுகோபனடனபதி
கீழ்ப்படிதல்துன்றுசது
ரோர்க்குமலிசிந்தைமருள்
கெடவாலினடியினருள்
தருயோகிவிழியுதவு— புதல்வோனே

கீர்த்தியொடிலங்கையர
சாட்சிமுனமண்டுமொரு

கெலிநாமனுயிர்சிதற
விடுராமனிரணியனை
மாய்த்தவரிதங்கைவட
பாற்கடிதுசென்றதமிழ்
மதிவாணனுணவடிசி
லறுமாதமுதவினவள்
கேட்டபடியிந்திருளு
வாத்திதிவிளங்கவமை
கிரிராஜதனையையயி
லெனமார்பிலணியுமழ— குடையோனே

போற்றுபிரமன்றலையில்
வீக்கமுறவன்றுபுடை
புகழாளனலைகடலில்
மூளைமாவையடுமுருகன்
ஆற்றுமகவங்கியுதி
சீர்த்தகரிவர்ந்துதுய
ரடியோடுகுறளைமுனி
விடநேரும்விமலனொரு
போட்டியிடையங்கமெரி
வாய்ப்படவுகந்துகவி
புகல்சாருவுருவுகொளு
மவனேறியுறைபனிரு— புயவேளே

பூத்தபொழிலெங்குமதன்
வாச்சியமுழங்கமுசு
புடையாடுமயிலினெதிர்
தகுதாகுதரிகுவென
நாட்டியவிதம்பயிலு
மாட்சியுமுயர்ந்தபல
நறுமாவினினியகனி
விழவாழைமுதிர்குலைகள்
போக்குகனியின்பிரசம்
நாட்டுமடைநந்தவயல்
புகுசீருநிறைவிருதை
நகர்வாழவுவகையுறு— பெருமாளே. (6)

தனனத் தனத் தானன தன்னன—தன தானா.

சுரதத்தொழிற்பாவையர்தம்மிட — மணுகாதே
துரியத்தினைச்சார்பவர்பொன்னடி — மறவாதே
பரதப்பதத்தோகையிலென்னெதிர் — மகிழ்வோடே
படிறற்றுயற்காகியநன்மொழி — யருள்வாயே
சரதச்சிவற்கோர்குருவென்னவு — மமைவோனே
சரசக்குறக்காரிகைமுன்னுறு — கிழவோனே
விரதக்கிளிக்கோவுறைபன்னிரு — புயவேளே
விருதைப்பதிக்கோவிலின்மன்னிய — பெருமாளே. (7)

தந்ததன தனனதன—தனதானா.

அங்கசனுமவன்மனைவி
யும்புனையுமணிமகுட
வந்தமிகுமுலையுடைய— மடமானார்

அந்திபகலுதவுசுக
மொன்றியிழிகபமதனை
யண்டிமரிமசகமென— வழிவேனோ

தங்கமுறுவதுகருதி
யென்றுமனவலைகயடை
சங்கடமுமெனைவிலகி— யொழியாதோ

சந்தமயின்முதுகிலிரு
மங்கையர்கள்புடையணுகு
சம்பிரமமுடனிலகி— யருள்வாயே

சிங்கமுகனிடுசபத
மங்கவொருநொடியிலுயிர்
சிந்தவிடுவலிமைபெறு— முருகோனே

செஞ்சரணநடைகொடணி
சந்துபுகல்கரியமுகில்
சிந்தைமகிழுசிதநய— மருகோனே

பங்கயனுமரியுமிகல்
நந்துதிருவருணைவரு
பைங்கிளிசொலினியதமி— ழணிதோளா

பண்டுதொடர்வினைமடிவு
கண்டவுயரடியர்மலி
பண்புகொளும்விருதைவளர்— பெருமாளே. (8)

தனதன தனனத் தந்தத்—தனதாந.

சதுமுகனணியத்தந்தொட்
டினுமொருகருவுட்டுன்றத்
தமியனைவிடில்நிற்கந்தப்— பழிபோமோ
சகமுரைமுவிதத்தின்பைப்
பொருளெனமருவிச்சிந்தைச்
சனியனுமறிவைக்கன்றச்— செயலாமோ
பொதுமுடிவிதெனக்கண்டுட்
களிபெறுபெரியர்க்கெந்தப்
பொழுதினுமருமைத்தொண்டைப்— புரியேனோ
பொறிமிகுகலபத்தின்பொற்
குடைநிழலணுகிச்சந்தப்
புகழ்நிலையருளற்கின்றைக்— கெதிர்வாராய்
பதுமுகனழுதெய்த்தன்பிற்
றுதிதரவுவகைச்சிந்திற்
படிபரசிவன்மெச்சுஞ்சற்— குருநாதா
பரவியகடலிற்றங்கிக்
கவிழிணர்நிறைகொக்கங்கப்
பழுதுறநொடியிற்கொன்றிட்— டெதிர்வேலா
கதுமுதுமதிபெற்றங்கிக்
கிரிவருகிளிசெப்புஞ்சொற்
கமழ்தொடைமிளிருத்துங்கத்— திரடோளா
கயலினம்வெருவித்தெங்கிற்
குலையுதிர்வளமைப்பண்பிற்
கவின்மலிவிருதைக்கந்தப்— பெருமாளே. (9)

தனனதன தானதந்த—தனதாந.

பலபனுவலாய்தலின்றி
மனவழியெலாமலைந்த
பதிதரொடுநானிணங்கி— மெலியாதே

பவளவிதழ்மாதரின்ப
மருவிவயதாகிவங்கு
படரவுடல்நீறுமுன்பு— மகிழ்வோடே
கலபமயிலாடுதந்தி
யிலைவகளிலெதேனுமொன்று
கருதுபரியாகவொன்றி— யெதிரேநீ
ககனமொடுபூமியெங்கு
மிவனுமொருதாசனென்று
கழறுபுகழ்நீடவிஞ்சை— யருள்வாயே
சுலபமெனவேனல்தங்கு
குறவர்மகள்தோள்விழைந்து
தொழுதகிழவோய்குறிஞ்சி— யிறையோனே
சுடுகொடியபாலைவந்த
புலவனெதிர்போய்விழுந்த
துளியெனுமொர்பாடல்விண்ட— குமரேசா
நலபருவமீறிநின்ற
வருணகிரியோதுசந்த
நளினமிகுபாவிலன்பு— தழைவேலா
நரலையொலிபோலெழுந்து
முழவமதிர்சீர்மலிந்த
நகர்விருதைவாழவந்த— பெருமாளே. (10)

தனன தாந்தன தத்த—தனதான.

படிகமாண்பமைசித்த
முடையர்போன்றுரைமிக்க
பகருதீங்கினர்நட்பை— யடையாதே
பணையநேர்ந்தெவர்கட்கு
மிதழையீந்திடுகெட்ட
பதகர்வாஞ்சையிலுட்கி— மடியாதே
கடிகலாந்தருகுக்க
லனையமாந்தர்கள்துற்ற
கடைகள்போந்தழுதுக்க— மணுகாதே

கருதிவேண்டியவற்றை
மயிலிலூர்ந்துளமுற்று
கருணைகூர்ந்தருளற்கு— வருவாயே.

முடிகணான்குடையத்த
னலறுபாங்கடைவித்த
முருகவாண்டலைநத்து— கொடிவீரா

முருடவேந்துவளர்த்த
மகள்முனேங்கியடுத்த
முனிவகாந்திகொள்சத்தி— யணிமார்பா

அடிகள்சார்ந்தருணைக்க
ணினியதேன்கவிசொற்ற
வமலனாங்கிளிமெச்சி— யுறைதோளா

அழகுமேம்படுகொற்ற
விருதையாம்பதிபற்று
மவர்கள்தேர்ந்துயவுற்ற— பெருமாளே. (11)

தான தனனதன—தனதானா.

மோகமலியமட
மாதருடல்தழுவி
மோகமுறுதுயர— மகலேனோ

மூளையிலதுகவி
யோதிவலிதினெதிர்
மூடர்குழுவையற— வொழியேனோ

ஆகமதினிலவு
சோதிதனையறித
லாணையெனுமவுரை— யணுகேனோ

ஆடுமயிலின்மிசை
யேறியடிமையெதி
ராகநிதமும்வர— நினைவாயே

நாகமணிமுடிக
டோறுநடனமிடு
நாதபுவனமகிழ்— புதல்வோனே

நாலுமுகனையொரு
போதுசினவியரன்
நாடமறையுதவு— குருநாதா

பாகமதுரகவி
நாளுமுரைசெய்கிளி
பாரபுயமிலக— வணிவேலா

பாநுநுழைவரிய
சோலைவளமைமிகு
பான்மைவிருதையுறை— பெருமாளே. (12)

## திருவிருதைத் திருப்புகழ்

முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

—000000—

## கட்டளைக்கலித்துறை.

கொல்வம்பறநினையுந்தண்டபாணிகுருசரணச்
செல்வம்பெறும்பார்த்தசாரதிவேண்டித்திருவிருதை
வில்வம்புனைவான்றருகுமரேசற்குவேய்ந்தசந்தப்
பல்வம்பலர்மஞ்சரிகற்கவாய்க்கும்பரசுகமே.

குருபாதமேகதி.

தெய்வமேதுணை.

# விளம்பரம்.

இந்நூல் வேண்டியவர்கள், நூலாசிரியருக்கு நேரிலெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.